# சனாதனி

ஆன்மீக கலை இலக்கிய இதழ்

01

# SHANATHANI

# सनातनि

ஜய
கார்த்திகை
மார்கழி
தை

2014
Nov, Dec

2015
Jan



## அருள் மாரி பொழியும் ஐயப்பன் சிறப்பிதழ்

வெளியீடு:
சனாதன சேவா பீடம்
நீர்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220.0081

பிள்ளையாரைப் போற்றுவோம்...
துணை வர வேண்டுவோம்...

கஜவக்த்ரம் ஸுரச்ரேஷ்டம் கர்ண சாமர பூஷிதம் /
பாசாங்குச தரம் தேவம் வந்தேஹம் கணநாயகம் //

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

பார்த்தனுக்கு அருளும் வைத்தார்
பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனாய் வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதியை நல்ல
தீர்த்தருள் சடையுள் வைத்தார்
திருப் பயற் றூரனாரே
(திருநாவுக்கரசர் தேவாரம்)

சிங்கள மொழி பேசும் மக்களிடையேயும் 'ஐயனாயக்க தெய்யோ' என்ற பெயரில் ஐயனார் வழிபாடு நிலவி வருகின்றது.

இலங்கையின் வடமத்திய, வடமேல் மாகாணங்களில் இவ்வழிபாடு பிரசித்தி பெற்றிருப்பதைக் காணலாம். காடுறையும் கடவுளாக போற்றப்படும் இத்தெய்வத்தை வழிப்போக்கர்களின் தெய்வமாகவும், குளங்களையும், வயல்களையும் காக்கின்ற கடவுளாகவும் அவர்கள் கருதிப் போற்றுகின்றனர்.

இதனால் அறுவடை நிறைவுற்றதும் இக்கடவுளுக்கு விழா எடுக்கின்றனர். அதனை 'முட்டி மங்கல்ய விழா' என்று அழைக்கின்றனர். இதனை விட, சமன் தெய்யோ மற்றும் தடிமுண்ட தெய்யோ ஆகிய கடவுளர் வழிபாடுகளிலும் ஐயனார் வணக்கச் சாயல்களை அவதானிக்க முடிகின்றது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் . . .

நமஸ்காரங்கள் / வணக்கங்கள்...

எல்லாம் வல்ல இறையருளோடும் குருவருளோடும் முத்திங்கள் இதழான சனாதனியின் முதல் இதழ் ஐயப்ப சிறப்பிதழாக தவழுகின்றது...

இலங்கையில் சிற்றிதழ் வெளியீடும் விற்பனையும் பகீரத பிரயத்தனமாகியுள்ள சூழலில் இறைவனிடமும், உங்களிடமும் நம்பிக்கையோடு சனாதனி வரத் தொடங்கியிருக்கிறாள்.


இவளது வருகை பல நாள் திட்டமன்று. திடீர் முயற்சியே ஆகும். எனவே, பல குறைகள் இருக்கலாம். அவை எதிர்வரும் இதழ்களில், நிவர்த்தியாகும் என எதிர்பார்க்கின்றோம்.

வரும் இதழ்களில் பல மாற்றங்களை செய்து, புதியவற்றினை இணைக்க விரும்புகின்றோம். தங்களின் ஆக்கங்களையும், ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் எழுதி அனுப்புங்கள்..

இந்நூல் வருகைக்கு நல்லாலோசனைகள் நல்கிய பலருக்கும், முக்கியமாக பதிப்பாசிரியர் சிவஸ்ரீ.கு.தியாகராஜக்குருக்கள், விரிவுரையாளர் ச.லலீசன், ஆசிரியர் நிரஞ்சனசர்மா, சிறப்பாக பதிப்பித்த ஷாம்பவி பதிப்பத்தார் அனைவருக்கும் எமது நன்றிகள்...

"தர்மோ ரக்ஷதி ரக்ஷித:"

அன்புடன்,
தி. மயூரகிரி சர்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜகத்குரு என்றால் யார்?

## அறிந்து கொள்வோம் நம் ஆச்சார்யர்களை!

ஜகத்குரு என்ற பட்டம் ஆன்மிகப் பீடங்களை அலங்கரிக்கும் சில ஆச்சாரியர்களுக்குச் சம்பிர தாயமாக வழங்கப்படுகிறது.

ஆன்ம சாட்சாத்காரம் அடைந்து உலகம் முழு வதையும் இறைவடிவமாகவே காணும் மகாத்மாக் களும் ஜகத்குருமார்களே.

ஒருமுறை காஞ்சிப் பெரியவர் ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் ஒருவர், "நீங்கள் ஜகத்குரு என்று பட்டம் சூட் டிக்கொண்டிருக்கிறீர்கள். ஜகத்குரு என்றால் அகில உலகத்துக்கும் ஆசான் என்று பொருள். ஆனால் பலர் உங்களைத் தங்கள் குருவாக ஏற்பதில்லை. அப்படியிருக்க, ஜகத்குரு பட்டம் உங்களுக்குப் பொருந்துமா?" என்று கேட்டார்.



பெரியவர் கூறினார்: ஜகத்குரு பட்டம் எனக்கு வேண்டியவர்கள் யாரும் தந்ததல்ல. அது பாரம்பரியமான பட்டம். அதனாலேயே நான் ஜகத்துக்கு குரு என்றாகிவிட முடியாது என்பது சரியே.

பாரம்பரிய பட்டம் என்பதால் அதை விலக்க எனக்கு உரிமை இல்லை. எனக்கு முன்னே வந்த ஆச்சாரியர்கள் அதைத் துறந்து விடவில்லை. என்னைப் பொறுத்த வரை நான் இப்பட்டத்தைப் புரிந்து கொண்டுள்ள விதத்தைச் சொல்கிறேன்.

ஜகத்குரு என்ற சொல் சம்ஸ்கிருதத்தில் சமாஸம் எனப்படும் கூட்டுச் சொல் - ஜகத் + குரு. சமாஸங்களில் தத்புருஷம், பஹுவ்ரீஹி என்று இரண்டு வகை உள்ளன.

தத்புருஷ சமாஸம் - ஒரே நபரைக் குறிக்கும் இரு சொற்களை இணைப்பது.

பஹுவ்ரீஹி - இரு வெவ்வேறு நபர்களின் தொடர்பை வெளிப்படுத்துவது.

உதாரணமாக, 'ராமதாஸ:' எனும் சம்ஸ்கிருத சமாஸத்தை எடுத்துக் கொள்வோம். இதில் ராம: என்ற சொல்லும் தாஸ: என்ற சொல்லும் உள்ளன. சம்ஸ்கிருதத்தில் இதை இரண்டு வகையாக அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

ராம: ய தாஸ: ஸ:=ராமதாஸ: என்று விக்ரக வாக்கியம் (இலக்கணம்) கூறினால், 'ராமன் என்ற வேலைக்காரன்' என்று பொருள். வேலைக்காரனின் பெயர் ராமன். இங்கு இரண்டு நபர்கள் இல்லை; ஒருவரே. இதற்கு தத்புருஷ சமாஸம் என்று பெயர்.

ராமஸ்ய தாஸ: ராமதாஸ: ராமனுடைய வேலையாள் என்னும்போது ராமன் ஒருவன், மற்றொருவன் வேலைக்காரன். இரண்டு பேரும் எஜமான் - பணியாள் உறவில் சம்பந்தப்படுகிறார்கள்.

இது பஹுவ்ரீஹி சமாஸம். ராமதாசர்களாக ஹனுமான், பத்ராசலம் ராமதாசர், சமர்த்த ராமதாசர் போன்றோர் போற்றப்படுகிறார்கள்.

ஜகத்குரு என்று என்னை யாராவது பஹுவ்ரீஹி சமாஸ ரீதியில் கருதிக் குறிப்பிட்டால் அதை அப்படியே காண்கிறேன்.

அதாவது 'ஜகத: குரு: ஸ ஜகத்குரு: 'உலகின் குரு' என்று அர்த்தம் பண்ணாமல், ஜகத் யஸ்ய குரு: - உலகைத் தம் குருவாகக் கொண்டவர் என்ற பொருளில் இந்த வார்த்தையைக் காண்கிறேன்.

'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்று ஔவைப் பிராட்டியும் கூறியிருக்கிறார் அல்லவா? எனவே உலகத்திலிருந்து நான் கற்றது கொஞ்சம், கற்க வேண்டியது ஏராளம். எனவே உலகமே என் குரு என்ற கருத்தில் நான் ஜகத்குருதானே?

கேள்வி கேட்டவர் பெரியவரது பணிவையும் பேரறிவையும் கண்டு பிரமித்துக் கண்ணீர் வடிய சுவாமிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

'வாழும் வரை கற்றுக் கொண்டே இருப்பேன்' என ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது. ❊

**எம்.எம். நாராயண்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐயப்பனை மணிகண்டன், தர்ம சாஸ்தா, ஹரிஹரபுத்திரன், ஐயனார் என்னும் பல்வேறு நாமங்களால் நாம் போற்றுகிறோம்.

கேரள நாட்டின் பம்பை நதிக்கரையில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள இந்தப் பெருமானின் வழிபாடு கடுமையான விரத அனுஷ்டானங்களைக் கொண்டு விளங்கி வருகிறது.

கட்டுப்பாடு, ஒழுங்கு, புலனடக்கம், தானம், ஜாதி மத பாகுபாடின்மை முதலியன இந்த வழிபாட்டில் முதன்மை பெறுகின்றன.

இவரது வரலாற்றை இங்கு சுருக்கமாகக் காண்போம்.

**மகிஷிமுகி தோற்றம்:**

காலவ மகரிஷியின் மகள் லீலா. அவள் தன் கணவரான தத்தனால் மகிஷி (எருமை வடிவு) ஆகும்படி சாபம் பெற்று மகிஷாசுரன் தங்கை மகிஷிமுகியாகப் பிறந்தாள்.

அவள் பிரம்மாவை நோக்கித் தவம் இருந்து, ''சாதாரண மனிதர்களாலும், ஆயுதங்களாலும் எனக்கு மரணம் ஏற்படக் கூடாது. ஹரிக்கும் ஹரனுக்கும் புத்திரனாகப் பிறந்து மனித வடிவில் பன்னிரண்டு ஆண்டுகள் ஓர் அரசகுமாரனாக வாழும் திருக்குமாரனே என்னை அழிக்க வேண்டும்'' என வரம் பெற்றாள்.

மகிஷிமுகியின் தொல்லைகள் தாங்காமல் தேவர்கள் திருமாலிடம் முறையிட்டார்கள். அவரும் அவர்களுக்கு உதவுவதாகக் கூறினார்.

**ஐயப்பன் தோற்றம்:**

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் அமுதம் கடைந்தார்கள்.

அமிர்தத்தைத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பிரித்துக் கொடுக்க ஸ்ரீமந் நாராயணன் மோகினி அவதாரம் எடுத்தார்.

அசுரர்களை மயக்கி அமுதத்தைத் தேவர்களுக்கே வழங்கிய திருமால், அதே மோகினி வடிவத்துடன் சிவபெருமானைக் காணச் சென்றார்.

மகிஷிமுகியின் அதர்மத்தை அழித்துத் தர்மத்தைக் காக்கும் பொருட்டு சிவ–விஷ்ணு சக்திகள், ஒரு திருக்குமாரனை மார்கழி மாதம் பஞ்சமி திதி சனிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் உருவாக்கினார்கள்.

அந்தத் திருக்குமாரனைப் பிரம்மாவிடம் ஒப்படைத்தார்கள்.

சகல கலைகளிலும் வல்லவரான பிரம்மா அக் குமாரனை ஏற்று 'தர்ம சாஸ்தா' என்று பெயர் சூட்டி சகல கலைகளையும் வழங்கினார்.

**மணிகண்டன்:**

சிவபெருமான் அந்தக் குமாரனின் கழுத்தில் தன் கழுத்தில் இருந்த ரத்தின மாலையைச் சூட்டி 'மணிகண்டன்' என்று பெயர் வைத்து, பூலோகம் சென்று பணியை நிறைவேற்ற அனுப்பினார்.

கேரள நாட்டில் பம்பையை அடுத்த நாட்டை ஆண்ட ராஜசேகரன் என்னும் பாண்டிய மன்னன் வேட்டையாடக் காட்டிற்கு வந்தான். அப்போது அத் திருக்குமாரனைக் கண்டு எடுத்துவந்து தன் மனைவியிடம் சேர்ப்பித்தான்.

குழந்தை இல்லாத அந்தத் தம்பதிகள் கழுத்தில் மணி மாலையுடன் இருந்ததனால் குழந்தைக்கு 'மணிகண்டன்' என்னும் பெயரிட்டு வளர்த்தனர்.

**இருமுடி:**

தாயின் தலைவலிக்கான மருந்தாகப் புலிப்பாலைக் கொண்டு வர மணிகண்டன் புறப்பட்டான். அப்போது அரசன் மணிகண்டனுக்கு நெய், தேங்காய், அரிசி முதலிய உணவுப் பொருள்களை ஒரு பக்கமும், பூஜைப் பொருள்களை மறுபக்கமும் இருமுடியாகக் கட்டி அனுப்பினார்.

அந்த இருமுடி கொண்டு கையில் வில்லும் அம்பும் ஏந்தி பம்பையாற்றை நோக்கி மணிகண்டன் சென்றார்.

காட்டில் சிவகணங்களும் ரிஷிகளும் மணிகண்டனைத் தரிசித்து, நீலமலை மேட்டில் நவரத்தினச் சிம்மாசனம் அமைத்து அவரை எழுந்தருளச் செய்தனர்.

அந்தத் தலமே இப்போது 'பொன்னம்பலமேடு' என்று வழங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு மகிஷியை அழிக்க மணிகண்டன் புறப்பட்டார்.

**மகிஷிமுகி மறைவு:**

இந்திரனின் பட்டினமான அமராவதியில் இருந்த மகிஷிமுகியின் கொம்புகளைப் பிடித்து ஆகாயத்தில் எறிந்தார் மணிகண்டன்.

ஆதலால் அவள் பம்பை ஆற்றின் கரையில் உள்ள அல்சா என்ற இடத்தில் வீழ்ந்தாள்.

அவளை அழிக்க முற்படும்போது சிறந்த பக்தையான அவள் சிவபெருமானைத் துதிக்க, அதனால் மனம் மகிழ்ந்த மணிகண்டன் அவளைத் தொட்டு ஆசீர்வதித்தார். ஹரிஹரனான இவரது திருவுடல் அவள் மீது பட்டதும், அவள் சாபவிமோசனம் பெற்று அழகிய மங்கையாக வடிவெடுத்துத் தன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி மணிகண்டனை வேண்டினாள்.

பெருமான், பிரம்மசரியத்தின் சிறப்புகளை அவளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

பிறகு அவளைத் தன் அன்புச் சகோதரியாக ஏற்று, தான் கோயில் கொள்ளவிருக்கும் இடத்தின் வலப்புறம் 'மஞ்சுமாதா' என்னும் திருநாமத்துடன் எழுந்தருள ஆசீர்வதித்தார்.

அவள் ஜோதி வடிவமாக மறைந்தாள்.

**கல்லிடுங்குன்று:**

மகிஷிமுகியின் பூத உடல் மட்டும் அவளது தவவலிமையால் வளரவே, பெருமான் காலால் அதை உதைத்தார்.



ஆதலால் அது அமுதா நதிக்கரையில் போய் வீழ்ந்தது.

தேவர்கள் அந்த உடல் மீது கற்களை வீசி மூடினார்கள்.

அதுவே இப்போது பழக்கத்தில் வந்து பக்தர்கள் அமுதா நதியில் நீராடி கல் எடுத்து வந்து கல்லைப் போடுகின்றனர்.

எனவே அந்த இடம் 'கல்லிடுங்குன்று', 'கல்நெடுங்குன்று' என்று வழங்கி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபரிமலை:**

சபரி, ஸ்ரீராமபிரான் அருளால் மோட்சம் பெற்ற இடமே தான் எழுந்தருள ஏற்ற இடம் என மணிகண்டப் பெருமான் தேர்ந்தெடுத்தார்.

ஐயப்பன் தன் கோயில் அமைய வேண்டிய இடத்தைப் பந்தளத்தில் இருந்து ஓர் அம்பை எடுத்து எறிந்து, அது விழும் இடத்தில் கோயிலை நிர்மாணிக்கும்படித் திருவாய் மலர்ந்தருளினார்.

அவர் சரம் எய்த இடமே இன்று 'சரங்குத்தி ஆல்' என வழங்குகிறது.

இன்றும் ஐயப்பன்மார்கள் தாங்கள் கொண்டுவரும் சரம், வாள், கதைகளை இங்கு போட்டுச் செல்கிறார்கள்.

சரம் குத்திய இடத்தில் மன்னன் அகத்திய முனிவரின் துணைகொண்டு கோயில் எழுப்பினார். ஐயப்பன் திருவுருவத்தை பரசுராமர் பிரதிஷ்டை செய்தார்.

இங்கு ஐயப்பன் யோக மூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

**பதினெட்டாம் படி:**

ஐயப்பனைத் தரிசிக்க செல்லும் பக்தர்கள் பதினெட்டு படிகளை ஏறிக் கடந்து செல்ல வேண்டும்.

புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் என்னும் இந்தப் பதினெட்டையும் கடந்து யோக மூர்த்தியாகக் காட்சி தரும் சாஸ்தாவைத் தரிசிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு படியாகக் கொண்டு தேங்காய் உடைத்து படிகளில் வழிபடுவது வழக்கம். இந்தக் கருங்கல் படிகள் தேவலோகத்தில் உள்ள விஸ்வகர்மாவால் கட்டப்பட்டதாக ஐதீகம்.

ஐயப்பனின் மெய்க்காவலர்களான கொச்சுக்குடுத்தை, வலியக்கடுத்தை ஆகிய இருவருக்கும் இரண்டு கோயில்கள் படிகளின் வலப்புறமும் இடப்புறமுமாக உள்ளன.

இவர்களை வணங்கி இவர்களின் உத்தரவை மானசீகமாகப் பெற்றுக் கொண்டு, பதினெட்டாம்படியில் தேங்காய் உடைத்து இருமுடியுடன் ஏற வேண்டும்.

இருமுடி உள்ளவர்களே இந்தப் படியின் வழியாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

பதினெட்டுப் படிகளிலும் பதினெட்டு திருநாமங்களுடன் மணிகண்டன் எழுந்தருளியிருக்கிறார்.

அந்தப் பதினெட்டுப் பெயர்களும் வருமாறு:

1. குளத்தூர் பாலன், 2. ஆரியங்காவு ஆனந்த ரூபன், 3. எரிமேலி ஏழைப் பங்காளன், 4. ஐந்து மலைத்தவன்,

5. ஐங்காரச் சகோதரன், 6. கலியுக வரதன், 7. கருணாகரத் தேவன், 8. சத்திய பரிபாலகர்,

9. சற்குணசீலன், 10. சபரிமலை வாசன், 11. வீரமணிகண்டன், 12. விண்ணவர் தேவன்,

13. விஷ்ணு மோகினிபாலன், 14. சாந்த சொரூபன், 15. சற்குணநாதன், 16. நற்குணக் கொழுந்தன், 17. உள்ளத்தமர்வான், 18. ஐயப்பன்.

06.02.1955ல் (ஜய தைபூசம்) உருவெடுத்து, மனிதநேயப் பணிகளாலும், அனர்த்த நிவாரணப் பணிகளாலும், ஆன்மீக செயற்பாடுகளாலும், இலங்கை வாழ் இந்து மக்களின் தன்னிகரற்ற அமைப்பாக விளங்குவது அகில இலங்கை இந்து மாமன்றமாகும். 1961ல் இம்மன்றமே திருக்கேதீஸ்வரத்தில் 'சிவானந்தகுருகுலத்தை' நிறுவியது. இலங்கை கல்வித்திட்டத்தில் இந்துமதத்தின் மிக ஆழமான நீடிப்பிற்கு இம்மாமன்று பெரும் பணி செய்துள்ளது. இத்தகு அமைப்பு மணிவிழா ஆண்டில் கால் பதித்திருக்கும் நிலையில் சனாதனி வியப்போடு மாமன்றச்சமூகத்தை பாராட்டி வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி ஐயப்பனின் அனுபவம்

# ஐயனைத்தேடி ஆறுவாரங்கள்..

ஹரிஹரபுத்திரன், அருள் பாலிக்கும் ஸ்ரீ தர்மசாஸ்தா, அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனாக எழுந்தருளி யிருப்பவன் சபரிமலை ஐயப்பன்.

'சபரி' என்ற மங்கை தவம் புரிந்து முக்தி பெற்ற மலை அது.

கேரள மாநிலத்திலுள்ள சபரிமலை மீதமர்ந்து, சகலகோடி பக்தர்களையும் காப்பாற்றும் சபரிகிரிவாசனைத் தரிசனம் செய்வதற்கு மலை யாத்திரை புறப்படுகிறோம்.

கார்த்திகை முதல் நாள் தக்க குரு சுவாமியிடம் மாலையணிந்து கொள்கிறோம். துளசிமணி மாலையை நமது கழுத்தில் அணிவித்து, அன்றுமுதல் ஐயப்ப விரதத்தைத் தொடங்கி வைக்கிறார் குருசுவாமி. முதல் முறையாக மலைக்குச் செல்பவர்கள் 'கன்னி ஐயப்ப சுவாமி' என்று அழைக்கப்படுகின்றனர்.

துளசிமணி மாலையணிந்தும் துன்பமெலாம் சென்றது போன்ற ஒரு புதிய தெம்பு மனதில் ஏற்படுகிறது. பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டிப்பதால் சௌந்தர்ய ரூபமாக முகமும் அகமும் விளங்குகிறது. அதிகாலை நீராடி, ஐயனின் தியானத்தில் ஆழ்ந்து, மாலை வேளைகளில் பஜனைகள்புரிந்து, மனதை ஒருநிலைப்படுத்துவதால் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது.

புலனடக்கமே பக்தி நெறியின்சாரம். அதுவே இறைவனை அடைவதற்குரிய மார்க்கம். பக்தியுணர்வோடு அனுபவத்தின் மூலமாகத்தான் நாம் அதனை உணரமுடியும்.


ஒரு மண்டலமாக நாற்பதுநாள் விரதமிருந்து டிசம்பர் மாத இறுதியில் நடைபெறும் மண்டல பூஜைக்கு செல்வோர் சிலர். அதற்கடுத்து தை மாதம் முதல் நாள் மகர விளக்கைக் காணச் செல்வோர் பலர். இதில் மகரவிளக்கைக் கண்டுவிட்டு வருவதுதான் புண்ணியமாகும். நாமும் மகரவிளக்கை தரிசனம் செய்வோம்.

சற்குரு நாதனாக, சகல ரோக நிவாரணனாக இருக்கும் சாஸ்தாவைக் காண புறப்படும் நாளும் வருகிறது. மலைக்குச் செல்ல இருமுடி கட்டப்படுகிறது. முன்முடியில் ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்வதற்கு வேண்டிய பொருள்களும், பின்முடியில் வழிப் பயணத்தின்போது, காட்டில் நாம் சாப்பிடுவதற்கு வேண்டிய உணவு வகைகளும் இருக்கின்றன.

ஸ்ரீகவி


சபரிமலைக்குச் செல்ல மூன்றுவழிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலிருந்து தேனி, கம்பம், குமிளி, வண்டிப் பெரியாறுவழி. கேரளாவிலுள்ள கோட்டயத்திலிருந்து சாலக்கயம் சென்று பம்பைக்குச் செல்லும் வழி. மூன்றாவது எருமேலி எனும் இடத்திலிருந்து ஐயனின் சன்னிதானத்திற்கு செல்லும் வழி. எல்லாவற்றையும்விட சிறந்த வழி எருமேலி வழி. காரணம், இவ்வழியே செல்கின்றபோது ஐயப்பன் புரிந்த பல அற்புதத் திருவிளையாடல்களால் ஏற்பட்ட தலங்களை தரிசிக்கலாம்.

எருமேலி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



—இது ஒரு சிறிய ஊர். இங்கே வாவர் சுவாமி என்று அழைக்கப்படும் முகமதியரின் கோயில் உள்ளது. இந்த வாவர் சுவாமி, ஐயப்பனை எதிர்த்துப் போர் புரிந்து, பின்னர் தோல்வியுற்று, தோழராக நட்பு பூண்டதாகக் கூறப்படுகிறது.

அதன் காரணமாகவே ஐயனின் தரிசனம் பெறச்செல்லும் ஐயப்பன்மார்களும் முதலில் வாவர் தரிசனம் பெற்று வழிப்பயணத்தைத் தொடர்கின்றனர். 'வாவர் சுவாமியின் அனுமதி பெருமல் சென்றுல் அந்த வழிப் பயணம் நல்லவிதமாக அமையாது' என்பது சிலரது கருத்து.

இந்த வாவர் சுவாமியைப் பற்றிப் பல கதைகள் சொல்லப்படுகிறதே தவிர, ஐயப்பனைப் பற்றிக் கூறும் புராணத்தில் இதற்கு ஆதாரம் எதுவும் காணப்படவில்லை. இடைப்பட்ட காலத்தில்தான் இவைகள் தோன்றியிருக்கக்கூடும்.

எருமேலியில் பேட்டைத் துள்ளல் என்ற ஆட்டம் நடைபெறுகிறது. இங்கு வருகின்ற ஐயப்பன்மார்கள் முகத்திலும் உடம்பிலும் கரும்புள்ளி செம்புள்ளிகளை வரைந்து கொள்கின்றனர், பறையொலி போன்றதொரு வாத்தியம் வாசிக்கப்படுகிறது. (இதை வாசிப்பதற்கென்று அங்கே ஒரு கூட்டமே இருக்கிறது). அந்த தாளம் நமது செவியில் கேட்டதும், தாளுகவே நமது கால்களும் ஆடுகின்றன.

''சுவாமி திந்தக்கத்தோம்
ஐயப்ப திந்தக்கத்தோம்
ஐயப்ப திந்தக்கத்தோம்
சுவாமி திந்தக்கத்தோம்...''

—இப்படி எல்லோரும் கூறியபடி பக்தி வெள்ளத்தில் மூழ்குகின்றனர். தன்னிலை மறந்து ஆடும் இந்த ஆட்டத்தைக் கண்டு மெய் சிலிர்க்கிறோம். ஆணவம், கோபம், ஆசைகள் போக ஆடும் இந்த நடனம் ஆனந்தமாக இருக்கிறது.

பேட்டைத் துள்ளல் முடிந்ததும் பெருவழிப்பாதை எனும் வழியே பயணம் தொடர்கிறது. இங்கிருந்து சன்னிதானத்தை அடைய சுமார் நாற்பது மைல் தூரம் உள்ளது. ஐயன் அருளாடல் புரிந்து நடந்த பாதை என்பதால் பெரும்பாலான ஐயப்பமார்கள் இதனையே தேர்ந்தெடுக்கின்றனர்.

முதலில் காளைகட்டி என்ற இடத்தை அடைகிறோம். இங்கு சற்று இளைப்பாறிவிட்டு அடுத்து வரும் அழுதை நதி என்ற தாவளத்தில் (தாவளம் என்பது இடத்தைதான் குறிக்கிறது) தங்க முற்படுகிறோம்.

அழுதை நதியில் குளித்துவிட்டு ஒரு கல்லை எடுத்துக்கொண்டு அழுதை மேட்டில் ஏறுகிறோம். மிகவும் கடினமான பாதை. பல சிரமங்களுடன் ஏறவேண்டும். வழியில் சாய்ந்துள்ள மரங்கள் மீது அமர்ந்து மறுபக்கம் இறங்கிச் செல்கிறோம். அழுதை நதிக்கு அடுத்து வருவது 'கல்லிடும் குன்று.'


நாம் அழுதை நதியிலிருந்து கொண்டு வந்த கல்லை இங்கு போடுகிறோம். மகிஷியை மணிகண்டன் வதம் செய்து, அவள் உடல்மீது நடனமாடிய இடம். அந்த நடனத்தைக் கண்டு களிப்பதற்கு உமாமகேஸ்வரர் நந்தியுடன் வந்து நின்ற இடம்தான் நாம் ஏற்கனவே பார்த்து வந்த காளைகட்டி என்ற இடம். கல்லிடும் குன்று என்ற இந்த இடத்தில், லட்சக்கணக்கான பக்தர்களால் போடப்பட்ட கற்கள் ஒரு பெரிய மலைபோல காட்சியளிக்கிறது.

மீண்டும் நடைப்பயணம்.

'இஞ்சிப்பாறை கோட்டை' என்று அழைக்கப்படும் தாவளத்தில் சற்று அமர்ந்து இளைப்பாறிவிட்டு, உடும்பாறை என்ற இடத்திற்குச் செல்கிறோம். இங்கு ஐயப்பனின் பரிவாரங்கள் சஞ்சரிக்கப்படுவதாக நம்பப்படுகிறது. அடுத்து 'முக்குழி' என்ற இடத்திற்கு வருகிறோம்.

''ஆ...! இதில் ஏறவேண்டுமா? நடக்கிற காரியமா இது?'' என்று மலைத்து நிற்கிறோம். எதிரே விசுவரூபமாகக் காட்சியளிக்கும் மலையின் பெயர் 'கரிமலை'. பார்க்கும்போதே மூச்சு நின்று விடும் போலிருக்கிறது.

''விரத விதிகளின்படி ஒழுங்காக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்திருந்தால் இதில் ஏறுவதும் இறங்குவதும் சுலபம்'' என்று குருசுவாமி கூறுகிறார். அப்படி நடந்திருக்கிறோமா என்று ஒருகணம் யோசித்துப் பார்க்கிறோம். அப்போது ஒரு ஐந்து வயதுச் சிறுவன் இருமுடி தாங்கி, சரணம் விளித்தபடி நம்மைக் கடந்து செல்கிறான். சிறிது நேரத்தில் கையில் 'தென்னங்கன்று'டன் எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் வேகமாகச் செல்கிறார்.

''என்ன அது தென்னங்கன்று கொண்டு செல்கின்றனர்?''

''மாலையணிந்து மலைக்குத் தொடர்ந்து பதினேழு ஆண்டுகள் வந்து பூர்த்தியடைந்தவர்கள், பதினெட்டாம் ஆண்டில் ஒரு தென்னங் கன்றினைக் கொண்டு வந்து, சன்னிதானத்திற்குப் பின்னுள்ள தோட்டத்தில் அவர்களது நினைவாக நடுவார்கள். பத்தொன்பதாம் ஆண்டு வரும்போது, அதிலிருந்து தேங்காய் எடுத்து நெய் நிரப்பி அபிஷேகம் செய்வார்கள்'' என்று குருசுவாமி விளக்குகிறார்.

ஏற்கனவே மலை மீது சென்ற ஐயப்பன்மார்கள் சில இடங்களில் இருமுடியைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, ஏறி வருகின்ற நமக்கு தங்களது மேல் துண்டால் விசிறிபோல வீசுகின்றனர். சிலர் குளுகோஸ் பாக்கெட்டுடன் நின்று கொண்டு எல்லோருடைய வாயிலும் போடுகின்றனர். நன்றி கூட சொல்ல இயலாதபடி மூச்சிறைக்கிறது. கனிவுடன் அவர்களைப் பார்த்துவிட்டு, கரிமலை மீது ஏறி, அதே போன்று மறுபுறம் இறங்கி, 'பெரியான வட்டம், சிறியான வட்டம்' என்ற இடங்களைக் கடந்து புண்ணிய நதியான 'பம்பா'விற்கு வருகிறோம்.

பம்பா நதியில் நீராடி பலர் பிதுர் கர்மாக்களை செய்தபடி இருக்கின்றனர். ஆங்காங்கே தத்தம் குழுவினரோடு ஐயப்பன்மார்கள் 'விரி'களில் தங்கியுள்ளனர். (நான்கு கட்டைகள் நடப்பட்டு, அத மீது செடிகொடிகளால் வேயப்பட்ட'பர்ணகசாலை(!)' தான் விரி எனப்படுகிறது. இதன் வாடகை சுமார். 200 ரூபாய் முதல் 500 வரையுள்ளது. பம்பாவிலிருந்து சிறிது தூரத்தில் ஓடும் நதியைத் 'திரிவேணி சங்கமம்' என்று கூறுகிறார்கள்.

ஐயப்பன்மார்கள் பம்பையில் தங்கி அன்னதானம் செய்து, நாள் முழுவதும் பஜனைகள் செய்தபடி உள்ளனர். இரவில் மூங்கில்களால் சப்பரம் போல செய்து, அதன் மீது வரிசையாக மெழுகு திரிகளை ஏற்றி, ஊர்வலமாக எடுத்துச்சென்று ஓடும் நதியில் விடுகின்றனர். அவைகள் நதியில் செல்வதைப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

பம்பையிலிருந்து ஐயப்பன் சன்னிதானத்திற்கு செல்லும் வழியில் உள்ள கணபதி, முருகன், ஆஞ்சநேயர் போன்றோர்களுக்குத் தனித்தனி சன்னிதிகள் உள்ளன. அங்கிருந்து செல்கின்றபோது நீலிமலை குறுக்கிடுகிறது. மிகவும் ரம்யமான இடம். மனதுக்கு இதமாக இருக்கிறது.

சபரி பீடம் என்ற இடத்திற்கு வருகிறோம். சபரி தவமிருந்த இடமாக சொல்கின்றனர். அங்கிருந்து சரங்கொத்தி என்ற இடத்தைப் பார்த்து வியந்து நிற்கிறோம். அம்பு, கத்தி, கதைகள், (எல்லாமே பிரம்பாலும் கட்டையாலும் செய்யப்பட்டது) போடப்பட்டு மிக உயரமான நிலையில் காட்சியளிக்கிறது.

இங்கிருந்துதான் தமக்கு ஆலயம் அமைய வேண்டிய இடத்தைக் குறிப்பிட்ட, மணிகண்டன் சரம் தொடுத்தார் என்று தெரிந்து கொள்கிறோம்.

அதோ...! ஆறு வாரங்கள் விரதமிருந்து யாரைக் காண இருமுடி சுமந்து வந்தோமோ, அந்த ஈசனின் சன்னிதானம். சன்னிதானத்தின் முன்னே ஜகஜ்ஜோதியாக எரியும் ஓமகுண்டம். ஓமகுண்டத்தைக் கடந்து ஐயப்பன் சன்னிதானத்தின் பதினெட்டாம் படியருகே நிற்கிறோம்.

பக்தியுடன் படிகளில் தேங்காய் உடைத்து இருமுடியுடன் படி பதினெட்டையும் கடந்தவர்க்கு முக்தி தருபவன் ஐயப்பன். ஒரு வருடத்திற்கு ஒரு தேங்காய் வீதம் இந்த ஐதீகம் நடைபெறுகிறது. படி பதினெட்டில் ஏறும்போது நமக்கு சுயநினைவே இல்லாததுபோல் தோன்றுகிறது.

மேலே சென்ற கன்னி மூல மகா கணபதியின் தனி சன்னதியை வலம் வந்து ஐயன்முன்னே நிற்கிறோம். தவக் கோலத்தில் சின் முத்திரையோடு அந்த தரணி புகழ் தயாபரன் நம் மீது அருட் பார்வையை வீசுகிறான்.

ஐயப்பனின் சன்னிதானத்திற்கு அருகாமையில் தனிக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மஞ்சமாதா மாளிகைப் புரத்து அம்மன் சன்னதியிலும் நாம் மன அமைதிப் பெறுகிறோம். பஸ்மக் குளத்தில் நீராடி பாவங்களைப் போக்குகிறோம்.



நன்றி - ஞானபூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் ஸ்துதி தசகம்

ஆசானுரூபபலதம் சரணாரவிந்த பாஜாமபார கருணார்ணவ பூர்ணசந்த்ரம் |
நாசாய ஸர்வவிபதாமபி நௌமி நித்ய- மீசான கேசவ புவம் புவனைகநாதம் ||

1. தனது திருவடிகளில் சரணடைந்தவர்கள் எந்தப் பலனை விரும்புகிறார்களோ அதை அளிப்பவர்; கரை இல்லாத கருணைக் கடலுக்குப் பூரண சந்திரன் போன்றவர்; ஈசுவரன் - கேசவன் ஆகிய இருவருடைய அம்சங்களால் தோன்றியவர் (ஹரி ஹர புத்திரன்); உலகிற்கு ஒரே தலைவராகத் திகழ்பவர் - அப்படிப்பட்ட ஸ்ரீ சாஸ்தாவை (ஐயப்பனை), எல்லா விதமான ஆபத்துக்களும் நீங்க வேண்டும் என்பதற்காகத் தினந்தோறும் வணங்குகிறேன்.

பிஞ்சாவளீ வலயிதா கலிதப்ரஸூன ஸஞ்சாதகாந்தி பரபாஸுரகேசபாரம் ||
சிஞ்ஜானமஞ்ஜுமணிபூஷணரஞ்ஜிதாங்கம் சந்த்ராவதம்ஸ ஹரிநந்தனமாச்ரயாமி ||

2. தலையில் அணிந்த மயில்தோகையைச் சுற்றி அலங்கரிக்கப்பட்ட மலர்களால் அழகுடன் விளங்கும் அடர்ந்த கேசத்தை உடையவர்; இனிய ஓசையை எழுப்பும் ரத்தினங்கள் நிறைந்த அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட அங்கங்களை உடையவர்; சந்திரனைத் தலையில் சூடிய சிவன் - திருமால் ஆகியவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் ஸ்ரீசாஸ்தாவை நான் சரணடைகிறேன்.

ஆலோல நீல லலிதாலகஹாரரம்ய - மாகம்ரநாஸமருணாதரமாயதாக்ஷம் |
ஆலம்பனம் த்ரிஜகதாம் ப்ரமதாதிநாத- மானம்ரலோக ஹரிநந்தனமாச்ரயாமி ||

தமிழாக்கம்:
டாக்டர் வி.எஸ்.நரசிம்மன்



3. கருமை நிறத்தோடு அழகாக அலை பாய்ந்து மாலைகள் போல் புரண்டிருக்கும் கேசத்தால் பொலிபவர்; அழகிய நாசியை, சிவந்த உதடுகளை, நீண்ட கண்களைக் கொண்டவர்; மூன்று உலகங்களுக்கும் ஆதாரமாகத் திகழ்பவர்; சிவபெருமானின் பூத கணங்களுக்குத் தலைவராக இருப்பவர்; சிவனுக்கும் ஹரிக்கும் மகிழ்ச்சியைத் தருபவரை நான் சரணடைகிறேன்.

கர்ணாவலம்பி மணிகுண்டல பாஸமான- கண்டஸ்தலம் ஸமுதிதானன புண்டரீகம் |
அர்ணோஜனாபஹரயோரிவ மூர்திமந்தம் புண்யாதிரேகமிவ பூதபதிம் நமாமி ||

4. காதில் அணிந்திருக்கும் ரத்தின குண்டலங்களால் பிரகாசிக்கும் கன்னங்களை உடையவர்; நன்றாக மலர்ந்த தாமரை மலர் போன்ற முகம் உடையவர்; திருமால் - பரமசிவன் ஆகியவர்களின் பெருமையே உருவமெடுத்து வந்த புண்ணியரும், பூதகணங்களின் தலைவருமானவரை நான் வணங்குகிறேன்.

உத்தண்டசாருபுஜதண்ட யுகாக்ரஸம்ஸ்த கோதண்டபாணமஹிதாந்தமதாந்தவீர்யம்|
உத்யத்ப்ரபாபடலதீப்ரமதப்ரஸாரம் நித்யம் ப்ரபாபதிமஹம் ப்ரணதோ பவாமி ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீண்ட அழகிய கைகளில் வில்லையும் அம்பையும் ஏந்தியவர்; பகைவர்களை அழிப்பவர்; அளவற்ற பராக்கிரமம் உடையவர்; ஒளி வீசும் பிரகாசம் உடையவர்; ஜோதிக்குத் தலைவராகத் திகழ்பவரை நான் தினமும் வணங்குகிறேன்.

மாலேயபங்க ஸமலங்க்ருத பாஸமான - தோரந்தராள தரளாமல ஹாரஜாலம் |

நீலாதி நிர்மல துகூலதரம் முகுந்த காலாந்தக ப்ரதிநிதிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||



6. மலய மலையின் சந்தனத்தால் உருவாக்கப்பட்ட மாலைகள் நிறைந்த மார்பை உடையவர்; தூய நீல நிறப் பட்டாடை அணிந்தவர்; முகுந்தனுக்கும் - காலனை வென்ற சிவனுக்கும் பிரதிநிதியாக இருப்பவரை எப்போதும் நான் வணங்குகிறேன்.

யத்பாதபங்கஜயுகம் முனயோப்யஜஸ்ர - பக்த்யா பஜந்தி பவரோகநிவாரணாய |

புத்ரம் புராந்தக முராந்தகயோருதாரம் நித்யம் நமாம்யஹமமித்ரகுலாந்தகம் தம் ||

7. பிறப்பு - இறப்பு என்ற நோயை நீக்கிக்கொள்ளும் பொருட்டு முனிவர்கள் இடைவிடாத பக்தியால் வழிபடும் தாமரைத் திருவடிகளை உடையவர்; முப்புரம் எரித்த சிவன் - முரனை அழித்த விஷ்ணுவின் புதல்வர்; பெருந்தன்மை உள்ளவர்; பகைவர்களின் கூட்டத்திற்குக் காலன் போன்றவரை எப்போதும் நான் வணங்குகிறேன்.

காந்தம் கலாய குஸுமத்யுதி லோபனீய- காந்திப்ரவாஹ விலஸத் கமனீயரூபம் |

காந்தாதனூஜஸஹிதம் நிகிலாமயௌக- சாந்திப்ரதம் ப்ரமதநாதமஹம் நமாமி ||

8. காயாம் பூவின் பிரகாசம் போல், மனதைக் கவரும் ஒளி வெள்ளத்தால் மிகவும் அழகாக இருப்பவர்; உயர்ந்த பக்தர்களோடு இருப்பவர்; அனைத்து நோய்களையும் போக்குபவர்; பிரமத கணங்களின் தலைவரை நான் வணங்குகிறேன்.

பூதேச பூரிகருணாம்ருதபூரபூர்ண- வாராம்நிதே வரத பக்தஜனைக பந்தோ |

பாயாத் பவான் ப்ரணதமேனமபாரகோர- ஸம்ஸார பீதமிஹமாமகிலாமயேப்ய : ||

9. பூத நாயகனே! கருணை என்ற அமுதப்பெருக்கு நிறைந்த கடலே! பக்தர்கள் வேண்டுவதை அளிப்பவரே! பக்தர்களின் நெருங்கிய உறவினரே! கரையற்றதும் கோரமானதும் ஆகிய பிறப்பு - இறப்பு என்ற சுழலுக்குப் பயந்து தங்களை வணங்கும் என்னை எல்லா நோய்களிலிருந்தும் காப்பாற்றுங்கள்.

ஹே பூதநாத பகவன் பவதீயசாரு- பாதாம்புஜே பவது பக்திரசஞ்சலாமே |

நாதாய ஸர்வ ஜகதாம் பஜதாம் பவாப்தி - போதாய நித்யமகிலாங்க புவே நமஸ்தே ||

10 பூதநாதனே! தங்களின் அழகிய தாமரைத் திருவடிகளில் நிலைகுலையாத பக்தி எனக்கு உண்டாகட்டும்! எல்லா உலகங்களுக்கும் தலைவனே! பக்தர்களுக்கு சம்சாரக் கடலைக் கடக்க உதவும் கப்பலாக விளங்குபவரே! அனைத்தையும் தனது அங்கமாகக் கொண்டவரால் (பரமசிவனால்) உருவாக்கப்பட்ட உங்களுக்கு என் வணக்கம் உரித்தாகுக.

எழுபத்தைந்தாண்டுகளாக பெரும்பணியாற்றி வரும் இலங்கை ராம கான சபா அண்மையில் பவளவிழாவைக் கொண்டாடியது. இந்நிகழ்வில், சிவஸ்ரீ.தா.மஹாதேவக்குருக்கள், சிட்சாநிபுண கி.சதாசிவக்குருக்கள், பிரம்மஸ்ரீ.ப.சிவானந்தசர்மா, பிரம்மஸ்ரீ. பாலகுமாரசர்மா ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர்களாக கௌரவிக்கப்பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# படிகளின் பெருமை

திருவேங்கடமலையில் வேங்கடநாதனின் கோயில் வாயிற்படியாகக் கிடக்க வேண்டும் என்று குலசேகர ஆழ்வார் வேண்டினார்:'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'.

வேங்கடநாதனின் திருவடிக் கீழ்ப்படியாய்க் கிடந்து, அவரது பவள வாயைக் கண்ணார - கண் குளிர எப்போதும் தரிசிக்கிற பேரின்பப் பேறு அது. ஆழ்வார் இப்போதும் படியாய்ப் பொலிகிறார். அந்தப் படியைக் 'குலசேகரன் படி' என்று பக்தர்கள் வழங்குகின்றனர்.

**படியழகு:** படி கோயிலின் முக்கியமான அங்கம். அடியார்கள் ஆண்டவனைத் தரிசிக்கப் படிகள் தேவை. படிகள் கோபுரப் படிகள், சந்நிதிப் படிகள், மலைப் படிகள், திருக்குளப் படிகள் எனப் பலவகைப் படும். கலையழகுடன் திகழ்கின்ற படிகள் பல உள்ளன. பாபநாசம் என்ற திருத்தலப் படிகள் நல்ல கலையழகுகள் நிரம்பியவை. ஆகவே 'பாபநாசம் படி அழகு'.



**படிகளின் எண்ணிக்கை:** படிகளின் எண்ணிக்கையும் மிக முக்கியமானவை. சில திருத்தலங்களில் படிகள் உணர்த்தும் உட்கருத்துகள் சில வருமாறு:

| | திருத்தலம் - உட்கருத்து | படிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சிதம்பரம் - ஐந்தெழுத்து மந்திரம் | 5 |
| 2. | தாராசுரம் - ஏழிசைப் படிகள் | 7 |
| 3. | திருவரங்கம் - எட்டெழுத்து மந்திரம் | 8 |
| 4. | மேலைத் திருவேங்கடநாதபுரம்- பன்னிரு ஆழ்வார் | 12 |
| 5. | காவலூர் - பன்னிரு ராசிகள் | 12 |
| 6. | திருவண்ணாமலை - தத்துவங்கள் | 36 |
| 7. | திருவேரகம் - தமிழ் ஆண்டுகள் | 60 |
| 8. | திருத்தணி- ஓர் ஆண்டின் நாட்கள் | 365 |
| 9. | திருவெள்ளறை ராஜகோபுரப் படிகள் | 18 |

**பதினெட்டாம் படி:** பதினெட்டு என்பது பெருமைக்குரியது; புனிதமானது. 18 பொருள்களின் தொகுதிகள் மிகுதியாக உள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண் புராணங்கள். பதினெண் சித்தர்கள். கீதையின் அத்தியாயங்கள் 18. காப்பிய வருணனைகள் 18. மகாபாரதப் போர் 18 நாட்கள் நடைபெற்றது.

கோயில்களில் பதினெட்டுப் படிகளை அமைப்பது ஒரு பழைய மரபு. சபரிமலைப் படிகளின் எண்ணிக்கை 18. படிகளில் பதினெட்டாம் படி தனிச் சிறப்புடையது. பதினெட்டாம் படியைப் புனிதமான படியாகப் போற்றுகின்றனர். காரணம், கோயிலின் காவல் தெய்வம் உறைகின்ற இடம் பதினெட்டாம் படியாம்.

**பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி:** பதினெட்டாம் படியில் வீற்றிருக்கின்ற காவல் தெய்வமான கருப்பண்ணசாமியைப் 'பதினெட்டாம் படி கருப்பண்ணசாமி' என்றே பக்தர்கள் அழைக்கிறார்கள்.

அழகர் மலையில் கருப்பண்ணசாமியைப் போற்றி வழிபடுவர். இங்கே தலைவாயிலின் கதவுகள் எப்போதும் மூடப் பட்டிருக்கின்றன. கதவுகள் - சந்நிதி. காவல் தெய்வம் உறைகின்ற இடம் - படி. கதவுகளையும் படியையும் வழிபட்டு வேறு வழியாகக் கோயிலுக்குள் நுழைய வேண்டும். இவருக்கு ஆடி அமாவாசையன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அன்று பக்தர்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கப் படுவது ஒரு தனிச் சிறப்பு.

சபரி மலையின் மகா சந்நிதானத்தையும், 18 படிகளையும் பாதுகாக்கின்ற காவல் தெய்வம் கருப்பண்ணசாமி. மற்றும் சொக்க கருத்தசாமி, வலிய கருத்தசாமி, கருப்பாயி முதலியோரும் மற்ற காவல் தெய்வங்கள் ஆவர். பதினெட்டுப் படியான் என்ற பெயர் ஸ்ரீஐயப்பனுக்கும், பதினெட்டாம் படியான் என்ற பெயர் கருப்பண்ணசாமிக்கும் உரியன.

சபரி மலையின் பதினெட்டுப் படிகள் பளபளக்கும் தங்கப் படிகள். இவற்றின் பெருமைகள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்த சில வருமாறு:

பதினெட்டுப் படிகளுக்குத் தனிப் பெரும் சிறப்பு களைத் தருகின்ற திருத்தலம் சபரிமலை.

ஐயப்பன் வழிபாடும், 'படி பூஜையும்' இணைந் தவை. பதினெட்டுப் படிகளுக்கும் படி பூஜை என்ற சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அப்போது அந்தப் படிகள் அனைத்தையும் தெய்வ வடிவங்க ளாகவே கருதி வணங்குகின்றனர். படிகளைக் கடந்து செல்கின்ற ஐயப்பசாமிகளின் பழி, பாவங் களை அந்தத் தேவதைகள் ஈர்த்து அகற்றுகின்றனர்.

படிகளை வண்ண மலர்களால் அலங்கரித்து, இரு பக்கமும் குத்து விளக்குகளை ஏற்றி வைத்து வழிபடுகின்றனர். இத்தகைய படி வழிபாட்டு முறை கள் சபரி மலைக்கே உரியன.

ஐயப்பனின் திருமேனியையும் அவனது திருவடிக் கீழ்ப் பதினெட்டுப் படிகளையும் இணைத் துப் பல ஓவியங்களை வரைகின்றனர்; பல சிற்பங் களை வடிக்கின்றனர். 'வாழைப் பந்தல்' வழிபாட் டின் போதும் பதினெட்டுப் படிகளை அமைக்கின்ற னர். திருமேனியும் படிகளும் இணைந்த ஐயப்பனின் திருமேனி போல வேறு திருமேனிகள் இல்லை.

பக்தர்கள் ஐயப்பனை வழிபடுவது நேர் நிலை வழிபாடு. அவனுடன் இணைந்துள்ள பதினெட்டுப் படிகளையும் வழிபடுவது சார்புநிலை வழிபாடு.

பக்தர்கள் பதினெட்டுப் படிகளைக் கடந்து செல் வதற்குக் கடும் விதிமுறைகள் பல உள்ளன. படிக ளின் புனிதத் தன்மையை நிலைநாட்டவும், பாதுகாக் கவும் இந்த விதிமுறைகள் நிச்சயம் தேவை.

கடும் விரதம் காத்து, இருமுடி சுமந்து வரும் ஐயப்பசாமிகள் மட்டும் பதினெட்டுப் படிகளில் ஏறும் தகுதி பெற்றவர்கள் ஆவர். வேறு பக்தர்கள் சந்நிதானத்தை அடைய வேறு வழிகள் உள்ளன.

18 படிகளைக் கருப்பண்ணசாமி முதலிய தெய்வங்கள் காவல் புரிகின்றனர். இவர்களுக்கு அவல், நெற்பொரி, கற்கண்டு, திராட்சை முதலிய காணிக்கைப் பொருள்களைப் படைத்து வழிபட்டு, அனுமதி பெற்ற பிறகே பதினெட்டுப் படிகளை ஏறிக் கடக்க முயல வேண்டும்.

மகா சந்நிதானத்தை நோக்கியபடி படிகளில் ஏற வேண்டும்; இறங்கவும் வேண்டும். மகா சந்நிதானத் துக்கு எதிரில் புற முதுகைத் திருப்பக் கூடாது.

முதல் கன்னிசாமி முதல் படியிலும், இரண்டாம் கன்னிசாமி இரண்டாம் படியிலும், இதே முறையில் பதினெட்டாம் முறை மலைக்கு வரும் ஐயப்பசாமி பதினெட்டாம் படியிலும் தேங்காயை உடைக்க வேண்டும். (பல இடையூறுகள் நிகழ்வதால் இந்த பூஜை முறை இப்போது கைவிடப்பட்டுள்ளது.)

பதினெட்டு முறை மலைக்கு வந்த ஐயப்பசாமி மிக மரியாதைக்குரிய குருசாமி என்ற பெருமையைப்

டாக்டர் டி. செல்வராஜ்

## ஏழு நிலைகள்



மனித வடிவையும், தெய்வ வடிவையும் ஒப்பிட்டு பேசுவது உண்டு. இதன் அடிப்படையில் ஐயப்பன் ஏழு கோயில்களில் அருளுவதாக ஐதீகம். இதில் மூலாதாரமாகிய பாபநாசம் சொரிமுத்தையனார் கோயில் தமிழகத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மூலாதாரம் - கால்கள் - பாபநாசம் சொரிமுத்தையனார்
சுவாதிஷ்டானம் - இடுப்பு - அச்சன்கோவில்
மணிபூரகம் - வயிறு - ஆரியங்காவு
அனாகதம் - பிறப்புறுப்பு - குளத்துப்புழை
விசுத்தி - மனம் - பந்தளம்
ஆக்ஞை - பிடரி - சபரிமலை
பிரம்மாந்திரம் - தலை - காந்தமலை

பெறுகின்றார். மேலும் கோயில் வளாகத்தில் தென்னங்கன்றை நடுவதற்குத் தகுந்த அனுமதியும் அவருக்குக் கிடைக்கிறது.

பதினெட்டுப் படிகளைப் பக்தர்கள் ஆர்வத்துட னும், குறிக்கோளுடனும் பக்தியுடனும் கடக்க முயலுகின்றனர். ஒவ்வொரு படியாக அவர்கள் முறைப்படி ஏறும்போது, அவர்களது பக்தி உணர்வு கள் படிப்படியாய் மேம்பட்டுப் பக்குவமாய்க் கனி கின்றன. ஐயப்பன் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வீற்றிருந்து போரருளைச் சுரக்கின்றான் என்பதைப் பதினெட்டுப் படிகள் குறிக்கின்றன. ஆகவே, வீட்டுப் பூஜை அறைகளிலும் பிற இடங்களிலும் ஐயப்பனது படங்களையும் சிலைகளையும் உயர மான இடங்களில் வைக்கின்றனர்.

பதினெட்டுப் படிகளைப் பற்றிய தத்துவ விளக் கங்களைப் பலர் பலவாறு கூறுகின்றனர். 'முப்பதும் ஆறும் படி முத்தி ஏணியாய்' என்று அருளினார் திருமூலர். (திருமந்திரம் 126)

'பக்தர்கள் முப்பத்தாறு தத்துவங்களை ஏணிப் படிகளாகக் கொண்டு ஏறி முக்தி பெற வேண்டும்'.

முப்பத்தாறு படிகளில், பதினெட்டுத் தத்துவப் படிகளைக் கடந்தவுடன் ஐயப்பசாமிகளுக்கு ஐயப்ப தரிசனம் கிடைக்கிறது. எஞ்சிய பதினெட்டுப் படிகளைக் கடந்தவுடன் அவர்களது மேன்மையான ஆன்மாக்கள் ஐயப்பனுடன் ஐக்கியமாகும்.

சாமியே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயன்- ஐயனார்- ஐயப்பன் அருளாட்சி பற்றிய நோக்கு

பிரம்மஸ்ரீ. தி.மயூரகிரி சர்மா
நீர்வேலி-

காருறழ் வெய்ய களிற்றிடையாகிப்
பாரிட எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்

என்பது கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்தபுராணத்திலுள்ள ஐயனார் தோற்றம் பற்றிய வரலாறு பேசும் பகுதியில் ஐயனாரின் திருவுருவ வர்ணனையுடன் கூடிய பாடல். இப்பாடலில் பூரணை புஷ்கலா தேவியருடன் ஹரிஹரபுத்திரராக ஐயப்பன் மதக்களிற்றில் எழுந்தருளி வருவதாகச் சொல்லப்படுகின்றது. இதே போலவே,

'மத்தமாதங்க கமநம் காருண்யாம்ருத பூஜிதம்
ஸர்வ விக்னஹரம் தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்'

"மதம் பொருந்திய யானையை ஊர்தியாகக் கொண்டவரும், கருணை பொழியும் திருமுகத்தினரும், வணங்கத்தக்கவரும, எல்லா துன்பங்களையும் நீக்குபவரும் ஆகிய சாஸ்தாவை வணங்குகிறேன்" என்று தர்மசாஸ்தா ஸ்தோத்திரம் சொல்கிறது.

### ஐயப்பன், ஐயனார் இவர்கள் இருவரும் ஒருவரா?

ஐயனார் வழிபாடு என்பது மிகப்பழைய காலம் தொடக்கம் தமிழகத்திலும் இலங்கையிலும் விரவிக் காணப்படுகின்றது. ஊர்கள் தோறும் வயல் நிலங்களிலும் கடலோரத்திலும் மலை உச்சிகளிலும் ஐயனாருக்கு கோயில் எழுப்பி தமிழர்கள் பாரம்பரியமாக கிராம உணர்வுடன் இயற்கை வழிபாடாற்றியும் சிவாகம பூர்வமாக திருக்கோயில் எழுப்பி பிரதிஷ்டை செய்து வேதாகம நெறி சார்ந்தும் வழிபாடாற்றி வந்திருக்கிறார்கள்.

சாத்தா (சாஸ்தா) என்றும் அழைக்கப்பெறும் ஐயனார் கிராமத்தேவதையாகவும் வழிபடப்பட்டு வந்துள்ளார். தமிழகத்தின் கிராமங்களில் ஊர் நடுவே சிவபெருமானுக்கோ, மஹாவிஷ்ணுவுக்கோ திருக்கோயில் பெரிதாக எழுப்பி வழிபாடாற்றும் போது ஊரின் நாற்புறத்தும் கிராமத்தேவதைகளாக மாரி, பிடாரி, ஐயப்பன் முதலிய தெய்வங்களை கோயில் அமைத்து வழிபாடாற்றியிருக்கிறார்கள். இது இப்படியே இன்னும் விரிவடைந்து சில ஊர்களில் ஐயனாருக்கு பெரிய கோயில்கள் அமைத்து மஹோத்ஸவாதிகள் செய்து வழிபாடாற்றியும் வந்திருக்கிறார்கள்.

இவ்வகையில் பெரிய சிற்ப சித்திர தேரில் ஐயனாருக்கு உலாவும் நடைபெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிட வேண்டியது. இது இவ்வாறிருக்க, மேற்படி ஐயனாரின் அவதாரமாகக் கொள்ளப்பெறும் ஐயப்பன் வழிபாடு கேரளதேசத்திலிருந்து அண்மைக்காலத்தில் மிகப்பிரபலம் பெற்றிருக்கிறது. இன்றைக்கு கேரளாவிலுள்ள சபரிமலைக்கு உலகெங்கிலுமிருந்து ஆண்டு தோறும் கோடிக்கணக்கான அடியவர்கள் மிகப்பக்தி சிரத்தையுடன் சரண கோஷம் முழங்க செல்வதையும் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, நம் தேசத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக வழிபட்டு வரும் ஐயனார் வழிபாடும் தற்போது பிரபலம் பெற்றுள்ள ஐயப்பன் வழிபாடும் நெருக்கமானதாகக் கருத முடிகிறது. ஐயனாரின் அவதாரமான ஐயப்பனை இணைத்து சிந்திக்க முடிகின்றது. எனினும் இரு வேறு வடிவங்களில் வழிபாடாற்றும் போது இடையில் சில ஸம்ப்ரதாய பேதங்களையும் அவற்றின் வழியான வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அவதானிக்கலாம்.

**ஐயனாரின் அவதாரமும் அருளாட்சியும்**

கச்சியப்ப சிவாச்சார்ய ஸ்வாமிகள் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியதும் சிறப்புப் பொருந்தியதுமான கந்தபுராணத்தில் மிகச்சிறப்பாக ஐயனாரின் அவதாரம் பேசப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எனவே இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஐயனார் வழிபாட்டில் நம் தமிழ் மக்கள் ஊறித் திளைத்திருப்பார்கள் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

சாவா மூவா மருந்தாகிய அமிர்தத்தைப் பெற திருப்பாற்கடலை தேவரும் அசுரரும் கடைந்து அமிர்தத்தைப் பெற்ற போது, தேவர்களுக்கே அமிர்தத்தை வழங்க திருமாலோன் மோஹினி வடிவம் என்ற அழகிய பெண் வடிவு கொண்டு, அசுரர்களை மயக்கி, தேவர்களுக்கு அமிர்தத்தைப் பகிர்ந்தளித்தார். இது நிற்க, சைவசித்தாந்த மரபானது

சாந்தமயமாக இறைவன் எழுந்தருள்கையில் உமா,
கோபங்கொள்கையில் காளீ,
போரிடுகையில் துர்க்கா,
புருஷத்துவத்துடன் எழுந்தருள்கையில் விஷ்ணு
என்று சிவபெருமானின் சக்திகளை நான்காகக் கூறும்.

இந்த வகையில் சிவபெருமானின் சக்தியாகவும் விஷ்ணு விளங்குகிறார். 'அரியல்லால் தேவியில்லை' என்ற அப்பர் பெருமானின் தேவார அடியும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. இதில் விஷ்ணுவை சக்தி என்கிற வகையில் குறைத்து மதிப்பிட்டு விட்டார்கள் என்று கொள்வதிலும் பார்க்க விஷ்ணு உயிர் என்றால், சிவன் உடல் அல்லது சிவன் உடல் என்றால் விஷ்ணு உயிர் என்று கொண்டார்கள் என்று கருதுவதே சிறப்பு. சிவபெருமானின் ஹிருதயத்தில் விஷ்ணுவும், விஷ்ணுவின் ஹிருதயத்தில் சிவனாரும் வாஸம் செய்வதாக ஒரு பிரபல சம்ஸ்கிருத வாக்கியமும் இருக்கிறது.

ஆக, சிவசக்தி ரூபமாக, சங்கர நாராயணனாக இணைந்து காட்சி தரவும் 'அரியும் அரனும் ஒண்ணு அறியாதார் வாயில் மண்ணு' என்ற கிராமத்துக் குழந்தைகள் சொல்லும் உண்மையை எடுத்துக் காட்டவும் இச்சந்தர்ப்பத்தில் மோஹினி அவதாரம் செய்து பெண்ணுருக் கொண்டிருந்த மஹாவி'ணுவுடன் ஆணுருக் கொண்டு காட்சி தந்த பரமேஸ்வரன் இணைய இந்த திருவிளையாடலில் குழந்தை ஒன்று பிறந்தது. ஆனால் சிலர் கூறுவது போல ஒரு பாற்புணர்ச்சி என்று இதனைக் கருதக்கூடாது. அப்படிக் கருதுவது இங்கு பொருத்தமானதுமல்ல. இங்கே இருவரும் ஒருவர். அவ்விருவரில் தோன்றிய மூன்றாமவரும் ஒருவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலந்தீவில் தேக்க மர நீழலில் நடந்த கூடலில் அரிகரபுத்திரர் அவதரித்தார். லோகரட்சகராக இறைவனால் உடனேயே பணி நியமனமும் மேற்படி ஐயப்ப தேவருக்கு வழங்கப்பெற்றதாகவும் கந்தபுராணத்தின் 'மகா சாத்தாப்படலம்' சொல்லும். கந்தபுராணம் இப்பெருமானின் தோற்றப்பொலிவைக் காட்டும் போது,

மைக்கருங்கடல் மேனியும் வானுலாம்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கிரத்துடன் ஓர் மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீக்கினான்

என்று கூறும்.

மேலும் கந்தபுராணம் சிவகுமாரர்களான விநாயகர் முருகப்பெருமான் போன்றோருக்கு இளவலாக தம்பியாக இக்கடவுள் கொள்ளப்படுவார் என்கிறது. தேவர்களையும் யாவரையும் காக்கும் பொறுப்பில் ஐயனார் என்ற இக்கடவுள் என்றும் ஈடுபட்டிருப்பதாகக் காட்டுகிறது.

ஸ்காந்தத்தின் அடிப்படையில் கந்தபுராணம் இவ்வாறு ஐயப்பனின் அவதாரத்தைக் காட்ட பத்மபுராணம் பஸ்மாசுரனை அழிக்க சிவபெருமான் எழுந்தருளிய போது பஸ்மாசுரனை மயக்கி அழிக்க திருமால் மோஹினி வடிவம் கொள்ள, அப்பொழுது பிறந்தவரே ஐயனார் என்று காட்டுகிறது. இதே போலவே தாருகா வனத்து முனிவர்களின் கடவுள் நிந்தனையையும் செருக்கையும் அழிக்க பிட்சாடனராக சிவபெருமான் வந்த போது மோஹினி வடிவம் கொண்ட திருமாலும் இணைந்து பிறந்தவரே ஐயனார் என்பதும் வரலாறு.

'ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதி' ஆகிய இறைவன் அடியவர்களின் நலன் கருதி திருவிளையாடல்கள் புரிகிறான். ஆதில் சில உண்மைகளை நிலை நிறுத்திக் காட்ட புராணங்கள் சொல்லப்படுகின்றன. இவற்றில் இறைவனையே அளக்கவோ, அவனின் பிறப்பை அறியவோ முற்படுவது விநோதமானது , உண்மையில் அது எவராலும் இயலாதது என்பதையே இக்கதைகள் புலப்படுத்தி நிற்கின்றன எனலாம்.

**தமிழ் இலக்கியங்களினூடு நயந்து பேசப்படும் ஐயனார்**

சூரபத்மனால் வருந்திய இந்திரன் சீர்காழியில் இந்திராணியுடன் மறைந்து வாழலானான். அப்பொழுது தேவர்களுக்காக இறைவனை வேண்ட திருக்கைலைக்கு அவன் செல்ல நேரிட்டது. அப்போது தனித்தவளாயிருந்த இந்திராணிக்கு அசுரர்களால் தீங்கு நேரிடுமோ என்று அஞ்சிய அவன் ஐயனாரைத் துதித்து அவரைக் காவலாக எழுந்தருளியிருக்க வேண்டினான். ஐயனார் தனது சேனாபதிகளில் ஒருவரான மஹாகாளர் என்பரை இந்திராணிக்கு காவலாக நியமித்தார்.

இந்திரன் எதிர்பார்த்தது போலவே சூரனின் தங்கை அசமுகி இந்திராணியைக் கண்டு அவளின் அழகைப் பார்த்து 'இவளை நாம் கொண்டு போய் நம் அண்ணனிடம் கொடுப்போம்' என்று துணிந்து அவள் சிவபூஜை செய்து கொண்டிருந்த சோலையை அடைந்து, இந்திராணியின் கையைப் பிடித்து இழுத்தாள். இவ்வமயம் அஞ்சிய இந்திராணி தன் காவல் நாயகராகிய ஐயனாரை நோக்கி தன் அபயக்குரலை வெளிப்படுத்தி அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம், விண்ணோர் ஆதியே ஓலம், செண்டார்
கையனே ஓலம், எங்கள் கடவுளே ஓலம், மெய்யர்
மெய்யனே ஓலம், தொல்சீர் வீரனே ஓலம், ஓலம்!

இந்த அழுகுரலைக் கேட்டு ஓடி வந்த ஐயனாரின் சேனாபதியாகிய வீரமஹாகாளர் அசமுகியின் இழுத்த கையை அறுத்தெறிந்தார். இவ்விடம் இன்றும் சீர்காழியில் 'கைவிடான் சேரி' என்று வழங்கப்பெறுவதுடன் அங்கு ஐயனாருக்கு திருக்கோயிலும் அமைந்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. ஆக, இந்திராணியின் திருமாங்கல்யத்தைக் காப்பாற்றிய முருகக் கடவுளுக்கு இளையவரான ஐயனாரின் பெருமையும் முருகனின் புகழ் சொல்ல வந்த கந்தபுராண காவியம் தெளிவுறக் காட்டுகிறது எனலாம்.

பெரியபுராணத்தில் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தம் வாழ்வின் நிறைவில் திருக்கைலாசத்திற்குச் சென்ற போது அவருடன் கைலாசத்திற்கு எழுந்தருளிய சேரமான் பெருமாள் நாயனார் 'திருக்கைலாச ஞான உலா' என்ற பிரபந்தத்தை பாடினார். அதனை கைலாசத்திலிருந்து கேட்டு தமிழகத்தின் திருப்பிடவூருக்குக் கொண்டு வந்து வெளிப்படுத்தி தமிழ்த் தொண்டாற்றியவராகவும் ஐயனார் பெருமானைக் காட்டுவர். பேரம்பலூருக்கு அருகிலுள்ள திருப்பிடவூர் என்ற இவ்வூரிலுள்ள ஐயனார் இன்றும் கையில் புத்தகத்துடன் காட்சி தருவதாகச் சொல்கிறார்கள். இவரை ஊர் மக்கள் 'அரங்கேற்றிய சாமி' என்று அழைக்கிறார்களாம்.

ஈழத்துச் சிதம்பர தலபுராணத்தில் இக்கதையை'

சேரமான் அருளிச்செய்த திருவுலாத் தெய்வ வெற்பில்
நேருறக் கேட்டு முந்நீர் நெடும்புவி உய்யுமாறு
சீருறு சோலை சூழ்ந்த திருப்பிடவூரை நண்ணி
ஆரவே சொல்லி வைத்த ஐயனே போற்றி போற்றி

என்று கூறுவதைக் காணலாம்.

**ஆகம நெறியில் ஐயப்பன் வணக்கம்**

சிவாகமங்கள் ஆகிய பூர்வகாரணாகமம், சுப்பிரபேதம், அம்சுமானம் ஆகியவற்றில் சாஸ்தா என்ற ஐயப்பன் பற்றிய குறிப்புகள் உள்ளன. த்யான ரத்னாவளி என்ற பத்ததி சோடச சாஸ்தா ஸ்வரூபங்கள் என்று பதினாறு வகையான பேதங்களை உடைய ஐயப்ப வடிவங்கள் பற்றிப் பேசுகின்றது. மதகஜ சாஸ்தா, மோஹினீ சாஸ்தா, அம்ருத சாஸ்தா, வீரசாஸ்தா, லக்ஷ்மீ சாஸ்தா, மதன சாஸ்தா, சௌந்தர சாஸ்தா, மஹா சாஸ்தா என்று இப்பேதங்கள் பதினாறாக அது கூறுகின்றது.

இந்த ஆகமங்கள் மற்றும் பத்ததிகளின் படி சில மாறுபாடான கருத்துகளும் உள்ளன. சாஸ்தாவின் பரிவாரங்களாக மஹாகாளன், கோப்தா, பிங்களாட்சன், வீரசேனன், சாம்பவன், த்ரிநேத்ரன், சூலி, தட்சன், பீமரூபன் ஆகியோரையும் கொடியாக யானை மற்றும் கோழியையும் த்யானரத்னாவளி காட்டுகிறது. அது சௌந்திகராஜன் புதல்வியான பூர்ணா மற்றும் அம்பரராஜன் புதல்வியான புஷ்கலா ஆகியோர் ஐயப்பனின் இரு மனைவியர் என்றும் சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இவ்வாறாக சில்பரத்னம் இப்பெருமான் மேகவர்ணர் என்றும் அவருக்கு பிரமை என்ற மனைவியும் சத்யகன் என்ற புதல்வனும் உண்டு என்றும் கூறுகிறது. பூர்வகாரணாகமம் ஐயப்பனின் நிறம் கறுப்பு என்கிறது. சுப்ரபேதம் என்ற சைவாகமம் ஐயப்பனை பெருவயிறர் என்றும் மதனா, வர்ணினி என்ற மனைவியரை உடையவர் என்றும் கரியமேனியர் என்றும் கூறுகிறது. இதே வேளை, அம்சுமான் ஆகமம் ஹரிஹர சாஸ்தா என்ற ஐயன் முக்கண்ணும் சாந்தரூபமும் கொண்டவர். வெண்பட்டாடை சாற்றிய திருமேனியர். தாமரை மலரில் எழுந்தருளியிருப்பவர் என்று கூறுகிறது. எனினும் பொதுவாக ஐயனாரையும் ஐயப்பனையும் பொன்மேனியராகவே காட்டும் வழக்கமே இருக்கிறது.

இவ்வாறாக, ஐயனார் -ஐயப்பன் வணக்கம் பல்வகைப் பட்டு பலவாறாக பலராலும் பல்வேறு நிலைகளில் செய்யப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். அவரை கிராமதேவதையாகவும் காவல் தெய்வமாகவும் கண்டிருக்கிறார்கள். அவரே முழுமுதற்பொருள் என்று பூஜை செய்தும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆக, ஐயன் அவரவர் தத்தம் அறிவின் வண்ணம் எப்படி எப்படி வணங்குகிறார்களோ அப்படி அப்படிக் காட்சி தந்து அவரவர் நிலைக்கேற்ப அருளி வந்திருக்கிறார் என்றே கருத முடிகின்றது.

ஏழைபங்காளன் ஆபத்பாந்தகனான ஐயப்பனின் வழிபாட்டில் ஜாதியில்லை சமயமில்லை, ஐயப்பனே வாவர் என்ற முஸ்லீம் நண்பரை உடையவர் என்று சொல்லுவார்கள். இதனால் சபரிமலைக்குச் செல்லும் அன்பர்கள் ஒவ்வொருவரும் வாவர் சுவாமி கோயில் என்று வாவர் மசூதிக்கும் சென்று பின்னரே ஐயப்பனைக் காணச் செல்கிறார்கள். பணக்காரன், ஏழை பேதமில்லை.. மாலை அணிந்து ஐயப்பனைக் காணச் செல்ல வேண்டும் என்றால் எல்லோரும் சுவாமிகள்... எல்லோரும் மஞ்சமாதாக்கள்... சிறுவர்கள் யாவரும் மணிகண்டன்கள்.. எங்கும் சமத்துவம் இது தான் ஐயப்ப வழிபாட்டின் விசித்திரம்.

அருள் உண்டு.. அச்சமில்லை.. எங்கு நோக்கினும் பஜனை..' சாமியே சரணம் ஐயப்பா' என்ற சரண கோஷம். எல்லாமே சிறப்புத் தான்.. எனினும் சில விடயங்கள் தெளிவாக்கிக் கொள்வதும் அவசியம். ஐயப்ப வணக்க முறைகள் சில தசாப்த காலங்களுள்ளேயே ஒழுங்கமைக்கப்பெற்றிருப்பதாகவே கருதமுடிகின்றது. ஆகவே, சில விடயங்களில் சிற்சில மாற்றங்களும் தேவை என்று சிறியேன் கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில் நல்ல விஷயங்கள் எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியனவே.

ஆக, ஹரிஹசுதனாக எழுந்தருளி சைவவைஷ்ணவ சமரச மூர்த்தியாகக் காட்சி தரும் பெருமான் முன்றலில் நம்மிடையே பேதங்கள் இல்லை.. ஜாதிகள் இல்லை.. சமயபேதங்கள் இல்லை.. அளவற்ற கிரியைகள் இல்லை.. பக்தி என்பதில் சங்கமித்து சரணகோ'ம் சொல்லுகிற போது நாம்...இன்பப் பெருவெளியில் சஞ்சரிப்பதை உணரலாம் என்பதில் மாற்றுக்கருத்துமில்லை....

தண்டாமரை முகமும் மலர்க்கண்களும் தன் கரத்தே
செண்டாயுதமும் தரித்து எமையாளும் சிவக்கொழுந்தைக்
கண்டேன் இரண்டு கரங்கூப்பினேன் வினைக் கட்டறுத்துக்
கொண்டேன் அழியாப் பெருவாழ்வு தான்வந்து கூடியதே

*ஸ்வாமியே. சரணம் ஐயப்பா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி பதில்கள் சில..

ஐயப்பன் வழிபாடு குறித்து பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. அவற்றில் சில பற்றி தமிழக அறிஞர்கள் சிலரிடம் வினவினோம்.... அவர்கள் வழங்கிய பதில்கள் இதோ...

❖ கேள்வி- தமிழிலக்கியங்களில் சாத்தா குறித்த தகவல்கள் உள்ளனவா..?

சங்க காலத்திலேயே சாத்தன் வழிபாடு இருந்துளது. சாத்தன் எனும் பெயருடைய புலவர்கள் பலரிருந்துள்ளனர். சிலப்பதிகாரம் மாசாத்தன் கோயிலைப் புறம்பணையான் கோட்டம் என்கின்றது.சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்தகாதையில் பாசண்டச் சாத்தன் எனும் ஒரு சாத்தன் பேசப்படுகின்றார். பாசண்டம் என்பது தொண்ணூற்றறுவகை சமய சாத்திரக் கோவை என்றும் இவற்றில் வல்லவன் இச்சாத்தன் என்றும் அதனால் மகாசாத்தன் எனப்படுவான் என்றும் கூறப்படுகின்றது. மாலதி என்னும் பெண்ணின் துயர் துடைக்க மாசாத்தன் குழவியாக அவதரித்து, அந்தணச் சிறுவனாக வளர்ந்து உலகியல் மரபுப்படி தேவந்தி என்னும் பெண்ணை மணந்து அவளுக்கு மட்டும் தன் 'மூவா இளநலம் காட்டி' என் கோவிலுக்கு நாள்தோறும் வா என்றுகூறித் தீர்த்த யாத்திரை செல்வது போல நீங்கியது முதலிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றன. இச்செய்தி ஐயப்பன் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒட்டி உறவாடுதலைக் காட்டுகின்றது.. திருநெல்வேலி,கன்னியாகுமரி மாவட்டங்களில் வேளாளர்களுக்கும் பிராமணர்களுக்கும் பல்வேறு பெயர்களுடைய சாத்தா குலதெய்வமாக அருள்பாலிக்கின்றார்.

முனைவர். கோ.ந. முத்துக்குமாரசுவாமி அவர்கள் ,கோவை

❖ கேள்வி- ஏன் சபரிமலைக்குச் செல்பவர்கள் கறுப்பு உடை அணிகிறார்கள்..?

சபரிமலை வனாந்தரம். ஒருகாலத்தில்யானைகளின் நடமாட்டம் அங்கிருந்திருக்கும். யானைகளுக்கு வெள்ளை நிறம் சினமூட்டும். அதனால் சபரிமலைக்குச் செல்வோர் கறுப்பு அல்லது நீல ஆடை உடுத்தினர் போலும்.

முனைவர். கோ.ந. முத்துக்குமாரசுவாமி அவர்கள் ,கோவை

❖ கேள்வி- மகரஜோதி என்பது என்ன? இது நிஜமா? அல்லது செயற்கையாக உருவாக்கப்பெறுவதா..? மகர விளக்கும் மகர ஜோதியும் ஒன்றா? வேறா?

நீதிமன்றம் இந்த விளக்கத்தைக் கோரியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், 2007ம் ஆண்டு இதுபற்றிக் கேட்டபோது சபரிமலைக் கோயிலின் தலைமை தந்திரி (அர்ச்சகர்) கண்டரூரு மஹேஸ்வரரு திட்டவட்டமாக இதற்கு விளக்கம் அளித்திருந்தார். "மகர ஜோதி வேறு, மகர விளக்கு வேறு. ஜோதிட ரீதியாக சூரியன் மகர ராசிக்குள் பிரவேசிக்கும் நாள் மகர சங்கிராந்தி அப்போது வானில் தோன்றும் மகர நட்சத்த்திரமே மகர ஜோதி எனப்படுகிறது. பொன்னம்பலமேடு மலை முகட்டில் தோன்றும் சுடருக்குப் பெயர் மகரவிளக்கு. கற்பூரத்தைக் கொட்டி மூன்று முறை இந்தச் சுடர் ஏற்றப் படுகிறது. கோயிலில் தீபாராதனை ஆகும் அதே நேரத்தில் மலைமுகட்டிலிருந்து ஐயப்பனுக்கு பெரிய தீபச் சுடர் காட்டி செய்யும் வழிபாடு இது" என்று அவர் கூறியிருந்தார். எல்லா செய்தி ஊடகங்களிலும் அது பெரிய செய்தியாக வந்திருந்தது. சமீபத்தில் கூட தாழமன் நம்பூதிரி குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுல் ஈஸ்வர் (யுவ ஹிந்த் என்ற இளைஞர் இயக்கத்தை நடத்தி வருபவர் இவர்) இதே விளக்கத்தை மீண்டும் ஒரு முறை தொலைக்காட்சிகளிலும், செய்தித் தாள்களிலும் அளித்திருந்தார் .

இதற்கெல்லாம் பின்னர் சபரிமலையில் மகரவிளக்கு சீசனில் கூட்டம் குறைந்ததா? இல்லவே இல்லை. வழக்கம் போல வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே தான் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று கேள்வி கேட்கும் நீதிமன்றம் யோசித்துப் பார்த்ததா தெரியவில்லை. சபரிமலைக்கு மாலைபோடும் ஐயப்பன்மார்களில் பலர் எளிய மனிதர்கள், ஏன் கல்வியறிவு குறைந்தவர்கள் கூட இருக்கலாம். ஆனால் அவர்கள் முழு முட்டாள்களோ, கருத்துக் குருடர்களோ அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சபரிமலை யாத்திரை என்பது ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு ஒரு பக்தி அனுபவத்தை, ஆன்மிக அனுபவத்தை அளிக்கிறது. அதனால் தான் இவ்வளவு இடர்ப்பாடுகளையும், வசதிக் குறைவுகளையும் கூட பொறுத்துக் கொண்டு வருகிறார்கள்.

பிரபல ஆன்மீக எழுத்தாளர் ஜடாயு, பெங்களூர்

❖ கேள்வி- சபரிமலைக்கு பல முறை சென்று வந்தால் சிறப்பா? பணமும் புகழும் படைத்தவர்கள் பன்முறை சென்று வருகிறார்கள்..? ஏழைகள் என்ன செய்வார்கள்?

நீங்கள் சொல்வது உண்மையே... அரசியல்வாதிகளும், நடிகர்களும், பணபலம் மிக்கவர்களும் தற்போது சுலபமாக சபரிமலைக்கு அடிக்கடி சென்று வருகிறார்கள். அவ்வாறு சென்று வருவது போதாது என்று தாங்கள் பதினெட்டாம் படிக்குருசாமி என்று வேறு முழங்குகிறார்கள். ஆனால், எந்த ஒரு ஸ்தலத்திற்கும் வெறுமனே செல்வதால் ஒன்றும் ஆகாது. பக்தியே பிரதானம்.

காட்டு வழிப்பயணம் என்பதால் பன்முறை சென்றவர்களுக்கு அதிக மரியாதையை தந்து அவர்களின் வழிகாட்டுதலில் யாத்திரை செய்தார்கள். ஆனால், இன்று நிலை மாறி விட்டது. போக்குவரத்து வசதிகள் பிரமாதமாக அதிகரித்து விட்டன.

ஆனால், குருவின் பாதையில் செல்வது தவறன்று. அது போற்றுதற்குரியதே. ஆனால், தாங்கள் இத்தனை முறை சபரிமலை சென்றோம் என்று சொல்வது முட்டாள்த்தனமானது. சபரிமலை செல்லாமலும் நல்ல ஐயப்பபக்தராக இருக்கலாம். மலைக்குச் சென்று வந்தாலும் மனோபக்குவமடையாதவர்களையும் கண்டிருக்கிறேன்.

வெறுமனே உடற்பயிற்சி நிலையத்துக்கு காலையும் மாலையும் சென்று பார்த்து விட்டு வந்தால் மட்டும் உடல் நலமுண்டாகுமா..?

எனினும், சபரிமலை புண்ணிய ஸ்தலமாதலில் அங்கே இறையருட் பிரவாகம் இருக்கிறது. அதை உணர வேண்டும். அந்த உணர்விலே உயர வேண்டும். அவ்வாறு உணர்ந்தவர்கள் தாம் இத்தனை முறை சென்று வந்தோம் என்று சொல்லி புகழவோ, இகழவோ மாட்டார்கள். வருடந்தோறும் சபரிமலைக்கு சென்று (ஏறக்குறைய ஐம்பது தடவைகளுக்கு மேல்) சென்று வந்த எத்தனையோ சுவாமிமார்கள் தங்களை குருசுவாமியாக அறிவிக்காமல் அமைதியாக வாழ்ந்து ஐயப்பன் பணிகளை செய்து வருகிறார்கள்.

மணிவண்ணப்பிரான், திருநெல்வேலி, தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்தா சம்ஸ்கிருதம் நாட்டார் தெய்வங்கள்

- ஜடாயு

ஐயப்பன் குறித்த சம்ஸ்கிருத புராணங்கள், தோத்திரங்கள்,ஐதிகங்கள் குறைந்தது 8-9 நூற்றாண்டுகளாவது பழையவை. பதினெட்டு புராணங்களில் ஒன்றான பிரம்மாண்ட புராணம் என்னும் புராணத்தில் பூதநாதோபாக்கியானம் என்னும் பகுதியில் இன்று கேரளத்திலும், தமிழகத்திலும் பிரபலமாக உள்ள ஐயப்பன் சரித்திரம் கூறப்படுகிறது. இது ஒரு தனி நூலாக இயற்றப்பட்டுப் பிறகு இந்தப் புராணத்தில் சேர்க்கப் பட்டிருக்கக் கூடும். சபரிமலை குறித்தும் இந்த நூல் கூறுகிறது. போரில் தோற்ற பிற்காலப் பாண்டியர்களிடமிருந்து கிளை பிரிந்ததே பந்தள ராஜவம்சம் அந்தக் கிளையில் வந்த ராஜசேகர பாண்டியனே ஐயப்பனின் தந்தையாகச் சித்தரிக்கப் படுபவர் என்று சில வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கும் கருத்தும் இந்தக் காலகட்டத்துடன் (11,12ம் நூற்றாண்டு) பொருந்தி வருகிறது.

கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்த புராணத்தில் மகா சாத்தாப் படலம் என்ற பகுதி சாஸ்தா குறித்த புராணக் கதையை முழுவதுமாகச் சொல்லி விடுகிறது. கச்சியப்பரின் காலம் கி.பி 1400க்குச் சற்று முன் அமைந்தது. எனவே அதற்கு முன்பே சம்ஸ்கிருத புராண மரபில் சாஸ்தா/ஐயப்பன் உறுதியாக இடம்பெற்று விட்டார் என்பது தெளிவு.

அங்கண் மேவி அரிகரபுத்திரன்
சங்கையில் பெரும் சாரதர் தம்மொடும்
எங்குமாகி இருந்து எவ்வுலகையும்
கங்குலும் பகல் எல்லையும் காப்பனால்

என்று கந்தபுராணத்தில் வரும் பாடல் தான் "காசி ராமேஸ்வரம் பாண்டி மலையாளம் அடக்கியாளும் ஹரிஹரசுதன்" என்று ஐயப்ப பக்தர்கள் இன்றுவரை கூறும் சரண கோஷத்திற்கு அடிப்படையாக இருக்கிறது.

தமிழகத்தில் சாத்தா / ஐயனார் / கருப்பண்ண சாமி வழிபாடு பரவலானது. குறிப்பாக மதுரை மற்றும் அதன் அருகில் உள்ள ஊர்கள், சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளில் ஐயனார், கருப்பண்ணசாமி கோவில்கள் அதிகமாகக் காணலாம். அடைக்கலம் காத்த ஐயனார், சேவுகப்பெருமாள் ஐயனார், பொய்சொல்லாமெய்ய ஐயனார் போன்ற சாமிகள் கோவில் கொண்டிருக்கிறார்கள். கருப்பண்ண சாமிகளில் சங்கிலிக்கருப்பன், பெரிய கருப்பன், சின்னக்கருப்பன், முத்துக்கருப்பன், பதினெட்டாம்படி கருப்பன், கோட்டைக் கருப்பன், பலிக் கருப்பன், முப்பிலிக்கருப்பன், காட்டுக்கருப்பன் என்றும் பல வகையாக வழிபாடு நடைபெறுகிறது. இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலரும் கருப்பன், கருப்பசாமி என்று பெயர் வைத்துக் கொள்வது இவர்களின் குலதெய்வங்களின் பெயரால் தான்.

நீர்வேலி அரசகேசரி விநாயகராலய ஸ்தானீக சிவாச்சார்யரும், சாஸ்தா பக்தரும், சிவாகமஅறிஞருமான சிவஸ்ரீ.சாம்பசதாசிவ சோமதேவக்குருக்கள் தம்பதியர் எதிர்வரும் தைத்திங்களில் ஷஷ்டியப்தபூர்த்தி விழாக்காண்கின்றனர். மணிவிழாக்காணும் இத்தம்பதியரையும் அவர் தம் குடும்பத்தினரையும் 'சனாதனி' மனமகிழ்வோடு வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பமார்களுக்கான முக்கிய குறிப்புகள்!

1. ஐயப்ப பக்தர்கள் விரதம் இருக்கும் சமயத்தில் உறுதியான கம்பியில் கட்டிய ஒரு மாலையே போதுமானது. துணை மாலை அவசியமே இல்லை.

2. முறையாக விரதம் இருந்தால் தங்களது மனசாட்சி அனுமதிக்கும் பட்சத்தில் மாலை போடாமல் 41 நாட்கள் விரதமிருந்து புறப்படும் நாளன்று மாலை போடுவதில் தவறேதும் இல்லை.

3. சென்ற தடவை உபயோகித்த மாலையை அது உறுதியாய் இருக்கும் பட்சத்தில் எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம்.

4. சபரிமலை தரிசனம் செய்தபிறகு, வழியிலேயே மாலையைக் கழற்றாமல் வீட்டுக்குத் திரும்பிய பிறகு மாலையைக் கழற்றுவது முழுமையான, முறையான, உத்தமமான செயலாகும்.

5. மாலையை ஏதாவது ஒரு கோயிலில் கழற்ற இயலாத பட்சத்தில் அம்மாவைக் கொண்டு கழற்றலாம்.

6. மாலை போட்டுக் கொண்டே தகப்பனாருக்கு சிரார்த்தம் (திதி) செய்யலாம்.

7. மாலைபோட்டு விரதம் இருக்கும்போது, மனைவிக்குக் குழந்தை பிறப்பதென்பது சுபகாரியமே. மாலையைக் கழட்ட வேண்டாம். குழந்தை பிறந்து 6 நாட்கள் கழித்து, புண்ணியாதானம் முடிந்து குழந்தையைப் பார்க்கலாம். பிரசவ சமயத்தில் தாங்கள் உடன் இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தாலும், குழந்தையை உடனே பார்க்கவேண்டும் என்ற கடமை உணர்வு இருக்கும் பட்சத்தில் மாலையைக் கழற்றலாம். மாலை போட்டிருக்கும் போது கருவுற்றிருப்பது சுபகாரியமே! எனவே, மாலை போடலாம்.

8. நாற்பத்தோரு நாட்கள் முறையாக விரதம் இருந்து பயணத்தை மேற்கொள்வதே, போற்றத்தக்க உத்தமமான செயலாகும்.

9. சபரிமலை பயணத்தில் மிதியடி அணிந்துகொள்வது என்பது தங்கள் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு தகுந்த முடிவு எடுக்கலாம். அணிவது தவறில்லை.

10. ஒருமுறை உபயோகித்த இருமுடிப்பையை மறுமுறை உபயோகிக்கலாம். அத்துடன் இன்னொருவர் உபயோகித்த இருமுடிப்பையை அது சுத்தமாக இருக்கும் பட்சத்தில் உபயோகிக்கலாம்.

11. முதல் வருடம் மலைக்குச் செல்லும் ஐயப்பமார்கள், கன்னிபூஜையை அவசியம் செய்யவேண்டும் என்கிறார்கள். வசதியில்லாத பட்சத்தில் கடன் வாங்கியாவது கன்னிபூஜையை செய்ய வேண்டும் என்பது அவசியம் இல்லை. ஐயப்பன் அத்தகைய ஆடம்பரத்தை விரும்புவதும் இல்லை. தங்களால் எப்போது எவ்வளவு முடியுமோ, எப்போது இயலுமோ, வீட்டிலேயே உணவைப் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு, சாலையோரத்தில் உள்ள மிகவும் வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்களால் இயன்றவரை அளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. தொழிற்சாலையில் வேலை செய்யும் போது கடமையைச் சரிவர செய்யும் பொருட்டு காலுறை அணியலாம். இதில் குற்றம் ஏதும் இல்லை.

13. விரத காலத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டாம். மற்றபடி சாதாரணமாக சிகைக்காய், சோப்பு உபயோகிப்பதில் தவறில்லை.

14. மாலை போட்டுக் கொண்டு விரதம் இருக்கும் சமயத்தில், வீட்டிலுள்ளவர்களுக்கு அம்மை கண்டிருந்தால் அதே வீட்டில் இருக்கும் பட்சத்தில் மாலையைக் கழட்டுவது உத்தமம்! ஆனால், தாங்கள் வெளியே எங்கும் தங்கியிருந்தால் மாலையைக் கழட்டவேண்டிய அவசியமில்லை.

## சபரிமலை யாத்திரை செல்லும் பக்தர்களின் கவனத்துக்கு

1. ஐயப்ப விரதத்தில், மூட நம்பிக்கைகள் அவசியமில்லாதவை.

2. ஐயப்ப பூஜை என்ற பெயரில், ஒலிபெருக்கி வைத்து நள்ளிரவு வரை அடுத்தவர்களுக்கு இடையூறாக இருப்பது விரும்பத்தக்கதல்ல!

3. தங்களுக்கு இது எத்தனையாவது மலை என்று வினவுவதும், தான் இத்தனை தடவை மலைக்குச் சென்றிருக்கிறேன் என்று பெருமை அடித்துக்கொள்ள வேண்டாம்.

4. மாலை போடுதல், இருமுடி கட்டுதல் மிகவும் புனிதமான வைபவம் ஆகும். இதை வீடியோ, புகைப்படம் எடுப்பது உகந்த செயல்கள் அல்ல. இதை அவசியம் தவிர்க்க வேண்டும்.

5. இருமுடி கட்டும் நாளை ஒரு விழாவாக எண்ணி, உற்றார் உறவினர்களுக்கு அழைப்பு அனுப்பி அவர்களிடம் அன்பளிப்பாகப் பணம் பெறுதலும் ஐயப்ப பக்தி விதிமுறைக்குப் புறம்பானது. பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பொருள்களை சன்னிதான உண்டியலில் அப்படியே சேர்ப்பதுதான் முறை.

6. இருமுடி தாங்குபவர்களுக்கு பூமாலை அணிவித்து, அடுத்த நிமிடமே அந்தப் பூக்கள் மற்றவர்கள் காலில் பட்டுச் சீரழிவது விரும்பத்தக்க செயல் அல்ல.

7. சபரிமலை யாத்திரையின்போது, கன்னி சாமிகள்தான் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திப்பது தவறானது. பக்தியும் பணிவும் எல்லோருக்கும் பொதுவானது.

8. ஐயப்ப பக்தர்கள் வெளி ஸ்தலங்களுக்கு வழிபடச் செல்லும்போது, அங்குள்ள நடைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் மதித்து நடத்தலும் அவசியமானது. உதாரணத்துக்குச் சொல்லவேண்டுமெனில், குருவாயூரப்பன் சன்னதியில் மிக சப்தமாக சரண கோ'ம் சொல்லாமல், அமைதியாக வழிபடுதல்.

9. சபரிமலை யாத்திரை செல்லும் ஒவ்வொரு பக்தரும், ஒரு ஐந்து நிமிடமாவது பம்பை நதிக்கரையையோ அல்லது சன்னிதானத்தையோ சுத்தம் செய்வது மிகவும் போற்றத்தக்க செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சபரிமலை யாத்திரையின்போது மிகவும் ஆடம்பரமான விருந்து உண்ணுதலைத் தவிர்த்தல் எல்லா வகையிலும் நல்லது.

11. சாப்பிட்ட இலைகளை, புனிதமான பம்பை நதியில் எறிந்து அந்தப் புண்ணிய நதியை அசுத்தப்படுத்துதல் மிகவும் தவறான செயலாகும். மாறாக, ஒரு குழி தோண்டி அவற்றைப் புதைக்கலாம்.

12. பம்பையில் விளக்கேற்றி வழிபடுதலை, மற்றவர்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல், அமைதியாக, ஆடம்பரமின்றி தங்கும் தாவளத்திலேயே (இடத்திலேயே) கொண்டாடுதல் மிக சிறப்பான செயல்.

13. சன்னிதானத்தில், கற்பூர ஆழிப் பிரதட்சிணத்தை எந்தவித அசம்பாவிதத்துக்கும் உட்படுத்தாமல் அடக்கமாகச் செய்வது எல்லோருக்கும் நல்லது.

14. கண்ணாடி பாட்டில்களையும் உடைந்த தேங்காய் மூடிகளையும் கண்ட இடத்திலும் போட்டு, மற்ற ஐயப்பன்மார்களின் பாதத்தைப் புண்ணாக்கும் பாவத்தைச் செய்ய வேண்டாம்.

15. ஐயப்பன் வழிபாட்டை, ஆவேசத்துக்கும் ஆக்ரோதத்துக்கும் ஆடம்பரத்துக்கும் உட்படுத்தாமல், அமைதியாகவும் சாத்விகமாகவும் மேற்கொண்டால் அனைவருக்கும் நன்மையே.

நன்றி - தினமலர்

காரைநகர் மணற்காடு கும்பநாயகியை எந்த இடப்பெயர்விற்கும் அகலாதிருந்து பல தசாப்தகாலமாக அர்ச்சிக்கும் பேறு பெற்ற சிவஸ்ரீ.நா.ஞானசம்பந்தக்குருக்கள் தம்பதியர் எண்பது அகவையை நிறைவு செய்து அண்மையில் பாலக்காடு (கேரளா)வில் சதாபிஷேகம் கண்டனர். அவருக்கான கௌரவிப்பு விழா நியந்த்ரீ அமைப்பால் சிறப்பாக நல்லூரில் கொண்டாடப்பெற்றது. அவர்களை சனாதனி நமஸ்கரித்து வாழ்த்துகின்றது.

நூற்றொரு அகவை கண்ட அளவையூர் வாசரும் இணுவையூர் அறிஞருமான புலவர்மணி ஸ்ரீமான். வை.க.சிற்றம்பலம் அவர்களை சனாதனி பணிவோடு வாழ்த்துகின்றது.

இந்துமத குருபீடாதிபதியாக விளங்கும் சிவஸ்ரீ. ஜம்புகேஸ்வர மஹேஸ்வரக்குருக்கள் தம்பதியருக்கு எண்பது அகவை நிறைவெய்தியதையொட்டி சதாபிடேக விழா அண்மையில் வெகு சிறப்பாக நிகழ்ந்தது. ஆயிரம் பிறை கண்ட அந்தண தம்பதியரை சனாதனி வாழ்த்தி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பனின் ஆறு படைவீடுகள்.

**ஆரியங்காவு ஐயப்பன் கோவில்,**

பரசுராமன் நிறுவியதாகக் கருதப்படும் ஐந்து தலங்களில் ஆரியங்காவு தர்மசாஸ்தா கோயிலும் ஒன்று இக்கோவில் கேரள மாநிலத்தில், கொல்லம் மாவட்டத்திலுள்ள ஆரியங்காவு எனும் சிற்றூரில் அமைந்துள்ளது. இந்து சமயக்கடவுளான ஐயப்பன் இக்கோவிலின் முதன்மைக் கடவுள் ஆவார். சபரிமலையில் பிரம்மச்சாரியாக உள்ள ஐயப்பன் இக்கோவிலில் புஷ்கலை என்னும் பெண்ணைத் திருமணம் செய்தவராகக் காட்சி தருகிறார்

.

தனு மாதத்தில் (மார்கழி) அய்யப்பன் - புஷ்கலா தேவி கல்யாண உற்சவம் நிகழ்ச்சி நடைபெறும். ஆர்யங்காவு கோயில், கேரளம் தமிழ்நாடு எல்லைப் பகுதியில் உள்ளதால் அம்பலத்தினுள் மலையாள ஆச்சாரங்களையும், உற்சவத்தின்போது தமிழ் ஆச்சாரங்களும் கடைபிடிக்கப்படுகின்றன.

**அச்சன்கோவில் தர்மசாஸ்தா**

பரசுராமரால் தோற்றுவிக்கப்பட்ட கோயில் இது. இங்குள்ள சாஸ்தாவின் சிலை மிகப்பழமை வாய்ந்தது. இங்கே அய்யப்பன் வனராஜனாக, அமர்ந்த நிலையில் கையில் அமுதமும், கருப்பனின் காந்தமலை வாளும் ஏந்தி காட்சி அளிக்கிறார். இவருக்கு இருபுறமும் பூர்ணா, புஷ்கலை எனும் இரு தேவியர் மலர் தூவுவது போன்று காட்சி தருகின்றனர். இங்குள்ள ஐய்யப்பனை கல்யாண சாஸ்தா என்று அழைக்கின்றனர். இவரை வழிபட திருமணத்தடைகள் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

**குளத்துப்புழை ஐயப்பன் கோவில் (அ) குளத்துப்புழா ஐயப்பன் கோவில்,**

ஐயப்பனின் முக்கியமான் கோவில்களுள் ஒன்று. இங்கு ஐயப்பன் குழந்தையாக காட்சி தருவதால் பால சாஸ்தா என்று அழைக்கிறார்கள். இதனை உறுதிப்படுத்தும் விதமாக இக்கோயிலின் வாசல் சிறு குழந்தைகள் நுழையும் அளவிற்கே உள்ளது. இக்கோவில் இந்தியாவின் கேரள மாநிலத்தின் கொல்லம் மாவட்டத்திலுள்ளகுளத்துப்புழா எனும் சிற்றூரில் அமைந்துள்ளது.

**எருமேலி**

இங்கு அய்யப்பன், வேட்டை நிமித்தமாக கைகளில் வில், அம்பு ஆகியவற்றை ஏந்திய திருக்கோலத்தில் காட்சித் தருகிறார். எருமேலி கேரளமாநிலத்தில்உள்ளது.

**பந்தளம்**

இங்கு தான் பந்தள மன்னன் ராஜசேகரப் பாண்டியனால் அய்யப்பன் சீரோடும், சிறப்போடும் வளர்க்கப்பட்டார். அந்த நாட்டு மன்னன் கட்டிய கோவில் இங்கு உள்ளது. இங்கு தான் சுவாமி அய்யப்பனுக்கு உரிய திரு ஆபரணங்கள் உள்ளன.

**சபரிமலை**

கேரளாவில் உள்ள இங்கு தர்மசாஸ்தாவான அய்யப்பன் தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு யோக சின் முத்திரை தாங்கி, எல்லோருக்கும் கேட்டதை வாரி வழங்கும் வள்ளலாக காட்சித் தருகிறார்.

சபரிமலைக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள், அய்யப்பன் எழுந்தருளி அருள்பாலிக்கும் இந்த 6 கோவில்களுக்கும் சென்று வழிபட்டால் சிறப்பு பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**தமிழகத்தின் பிரபல சபரிமலை குருஸ்வாமியும் ஐயப்பவழிபாட்டு ஆய்வாளருமான உபந்நியாசகர். ஸ்ரீமான். அரவிந்த் சுப்பிரமண்யம் அவர்கள் சொன்னவை...**

- சில சாஸ்த்திரங்கள் கறுப்பு நிற ஆடைகளை அணிய வேண்டாம் என்று சொல்வதால் சாஸ்த்திர நம்பிக்கை மிக்க வைதீகமான பக்தர்கள் ஐயப்பவிரதத்தில் கறுப்பு நிற ஆடையை தவிர்க்கலாம். பம்பையில் நீராடிய பின் சுவேதவஸ்த்ரம் தரித்து மலையேறுவதே பண்டைய மரபாகும்.

- மாளிகைபுர மஞ்சமாதா எப்போதும் சர்வகல்யாண ரூபிணியான பராசக்தியாவாள். அவளது விவாகத்தை கன்னிச்சாமி வருவதுடன் தொடர்பு படுத்துவது தவறான ஐதீகமாகும். இதற்கு பூதநாதோபாக்யானத்திலோ வேறு எங்குமோ எந்த ஆதாரமும் இல்லை.

- ஐயப்பனின் காலை சுற்றியிருப்பது யோக அடையாளமான யோகபட்டமாகும்.

- மஹாசாஸ்தாவின் எட்டு அவதாரங்களுள் ஒன்றான தர்மசாஸ்தாவே ஐயப்பன்.

- நாம் பாவிக்கும் சாஸ்தா சஹஸ்ரநாமத்தை விட, ஸ்காந்தத்தில் இன்னொரு சஹஸ்ரநாமம் இருப்பதாக தெரிகிறது. அது கிடைத்தால் விசேடமாகும்.

- ஐயப்பவிரதம் மாலை அணிந்து கொள்ளும் இடத்திலே நிறைவு செய்வதே சிறப்பு. அதே போல, யாத்திரைக்குச் செல்பவர்கள் பெரிய பாதையால் செல்வதே சிறப்பு.

- திருவாபரணபுறப்பாட்டுடன், பேட்டை துள்ளல் நிறைவடையும். ஆனால், தற்போது மாத பூஜைக்கும் பேட்டை துள்ளுகிறார்கள். அது தவறானதாகும்.

- ஐயப்பபக்தர்கள் ஆங்காங்கே தேங்காய் உடைப்பது பல்வேறு தேவதைகளுக்கும் திருப்தியளிப்பதற்காக ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதனி



**தர்ம ரக்ஷணம்**

தர்ம ரக்ஷணத்திற்காக என்னாலானதைச் செய்ய வேண்டும் என்று தான் ஓயாமல் நினைத்துக் கொண்டு எதையாவது திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறேன். Goal ரொம்பவும் எட்டத்தில் தான் இருக்கிறது. என் பிரயத்தனத்தை விட ஜாஸ்தி வேகத்தோடு அது விலகி விலகிப் போய்க் கொண்டேயிருக்கிறது. அதற்காக இந்த ரேஸில் நான் ஓய்ந்து விடக் கூடாது. அல்லது இப்போது வந்திருக்கிற நாகரிகப் போக்குகள் தான் சரி என்று விட்டு விடவும் கூடாது. 'போனது போனது தான்; சீர் செய்து சாத்தியப்படாது. இப்போது ஏற்பட்டிருக்கிற கலிப் பிரவாஹத்தைத் தடுத்து மாற்றுவது நடக்காத காரியம்' என்று விட்டு விடவும் கூடாது. அநாதி காலமாக இந்த தேசத்தில் உயர்ந்த நிலையில் இருந்து வந்திருப்பதும், பரிபாலித்து வந்திருப்பதுமான தர்மங்களையும் நான் வாரிக் கொடுத்து விட்டு விட்டால் அதைவிடப் பெரிய தோஷம் இல்லை.

கீதையில் சொன்ன மாதிரி ஜயாபஜயம் அவன் கையில் இருக்கிறது; என்று விட்டு விட்டு, நான் பாட்டுக்கு முன் வைத்த காலைப் பின் வைக்காமல், என் பிரயத்தனத்தை விடாமல் பண்ணிக் கொண்டே தான் போக வேண்டும். ரிஸல்ட் என்னுடைய 'ஸின்ஸரிடி'யையும், அந்தரங்க சுத்தத்தையும், தபஸ்ஸையும் பொறுத்து அமையும். கணிசமான பலன் இதுவரைக்கும் ஏற்படவில்லை என்றால் என் ஸின்ஸிரிடி போதவில்லை, என் மனஸ் சுத்தமாகவில்லை, என் தபஸ் குறைச்சல் என்று தான் அர்த்தம். லோகம் என்னை எத்தனை ஸ்தோத்திரம் பண்ணினாலும் எனக்கு இப்படித்தான் தோன்றுகிறது.

**தெய்வத்தின் குரல்**

தொடர்புகளுக்கு:


தி. மயூரகிரி சர்மா
"சனாதனி"
அரசகேசரிப் பிள்ளையார் கோவிலருகில்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
யாழ்ப்பாணம்.
e-mail: mayoorakiri@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org